யாழ்ப்பாணம்
நல்லூர் ஜெ நூலகம்,


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 தை 20 ஞாயிற்றுக்கிழமை (02-02-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 67


# வடக்கு - கிழக்கில் 5,800 பேர் காணாமற் போயுள்ளனர்!

## ஜனாதிபதியே ஏற்றுக்கொண்டார்

கொழும்பு, பெப்ரவரி 2

**வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இதுவரை மொத்தம் 5,800 பேர் காணாமற்போயுள்ளனர்.**

**இந்த விவரத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் ஏற்றுக் கொண் டார்.**

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற மேற்படி பத்திரிகையாளர் மா நா ட் டி ல் மனித உரிமை மீறல்கள் குறித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு அவர் பதிலளித்தார்.

இது குறித்து ஜனாதிபதி பத்திரிகையாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்ததாவது:-

நாடெங்கும் இருந்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கிருஷாந்தி மற்றும் மூவர் கொலை குறித்து ட்ரயல்-அற்பார் விசாரணை

### பிரதம நீதியரசருக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, பெப். 2

கிருஷாந்தியைக் கற்பழித்துக் கொலை செய்ததாகவும், அவரைத் தேடிச் சென்ற தாயார், சகோதரன், அயலவர் ஆகியோரைக் கொலை செய்ததாகவும் கூறப்படும் சம்பவங்கள் குறித்து ''ட்ரயல் — அற்பார்'' நீதி விசாரணை நடத்தப்படும்.

இதன் பொருட்டு மேல் நீதிமன்ற நீதியரசர்கள் மூவரைக் கொண்ட விசாரணை நீதிமன்றம் ஒன்றை நியமிக்குமாறு, ஜனாதிபதி சந்திரிகா, பிரதம நீதியரசரைப் பணித்துள்ளார். (''ட்ரயல் — அற்பார்'' என்பது ஜூரர்கள இல்லாது விசாரணை நடத்தித் தீர்ப்பு வழங்குவ

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி எப்பிரிவுக்கும் கழுகுசின்னம் இல்லை

### தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அறிவிப்பு

கொழும்பு, பெப். 2

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் இருபிரிவினர் உள்ளனர் அல்லவா?

அந்த இரு பிரிவினருக்குமே தேர்தல் ஆணையாளர் கழுகுச் சின்னத்தை வழங்க மறுத்துவிட்டார்.

அந்த இரு பிரிவுகளுமே உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் தமது வேட்பாளர்களுக்கு கழுகுச் சின்னத்தை வழங்குமாறு தேர்தல் ஆணையாளரைக் கோரி இருந்தன.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் இரு பிரிவினரும் தமக்கிடையிலான பிரச்சினைகளை வழக்கு மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். (இ-5)

### இ. தொ. கா. பொதுச்செயலர் செல்லச்சாமி எனத் தெரிவிப்பு

எம். எஸ். செல்லச்சாமி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலர் என்று தேர்தல் ஆணையாளர் முடிவு செய்துள்ளார்.

செல்லச்சாமி இ. தொ.கா. விருந்து பிரிந்து சென்று தனிக்கட்சி அமைத்திருப்பது தெரிந்ததே.

அதேசமயம் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சியின் உரிமைகள் கட்சியின் எப்பிரிவுக்கும் வழங்கப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## கசிப்புக் காய்ச்சுதல் - திருடுதல்: ஈ.பி.டி.பி கடுமையாக எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 2

கசிப்புக் காய்ச்சுதல், திருடுதல் உட்பட மற்றும் சமூக விரோத நடவடிக்கையில் ஈடுபடுவோரை ஈ. பி. டி. பி எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக ஈ. பி. டி. பியின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் விடுத்த அறிக்கை வருமாறு:-

பல வழிகளிலும் தமது சொத்துக்களை இழந்து துன்பப்பட்டு அன்றாட வாழ்க்கைக்கு கஷ்டமான நிலையில் அகதிகளாகத் திரிந்த மக்கள் யாழ்நகர் மீட்கப்பட்ட பின்னர் தமது இருப்பிடங்களுக்கு திரும்பினர்.

போரின் தாக்கத்தினால் சிதைந்து அழிந்து கிடந்த தமது வீடுகளை தங்களால் இயன்ற அளவு திருத்தி தமது சொந்த வீட்டில் சிறிது நேரமாவது நிம்மதியாக [illegible] எத்தனிக்கின்ற வேளையில் எரிந்த வீட்டினில் பிடுங்கிய கொள்ளிபோல் பல வீடுகளில் கூரைகள், கதவுகள், வீட்டுத் தளபாடங்கள் என்பன தொடர்ச்சியாகத் திருடப்பட்டு வருகின்றன.

அத்துடன் வீடுகளில் பெறுமதியான நகை பணம் என்பனவும் கொள்ளையடிக்கப்பட்டு வருகின்றன.

தமது வாழ்க்கை மிகக் கஷ்[illegible]

(8 ஆம் பக்கம் பார்க்க)

### பொலீஸ் மா அதிபராக லக்கி

கொழும்பு, பெப். 2

தற்போதைய பொலீஸ் மா அதிபர் டபிள்யு பி. ராஜகுரு ஓய்வுபெற்ற பின்னர் அவரது இடத்திற்கு மாகாணப் பிரதிபொலீஸ் மா அதிபராக பணியாற்றும் லக்கி கொடித்துவக்குவை நியமிக்க ஒழுங்குகள் நடைபெறுவதாக 'யுக்திய' வார இதழ் தெரிவிக்கிறது.

இத்துடன் மாகாணங்களுக்குப் பொறுப்பாக உள்ள பிரதிப் பொலீஸ் மா அதிபர்களுக்கும் மாற்றங்கள் வழங்கப்படவுள்ளன என அப்பத்திரிகை தெரிவிக்கிறது. (இ-10)

### முச்சந்தி முரளி



அப்ப இந்த அறிவிப்புகள் போலத்தான் இம் முறை தேர்தலும் இருக்குமோ ...?

### வவுனியா அகதி முகாமில் நோய்

வவுனியா, பெப். 2

வவுனியாவிலுள்ள அகதி முகாம்களில் நோய்கள் பரவுவதாகத் தெரியவருகின்றது.

பலர் கண்நோய், காய்ச்சல், வயிற்றோட்டம், சிரங்கு போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும்—

இந் நோய்கள் பரவுவ

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பகுதியில் புக்காரா தாக்குதல்!

கொழும்பு, பெப். 2

கடந்த புதன், வியாழன் ஆகிய இரு தினங்களாக வன்னிப்பகுதியில் புக்காரா குண்டுவீச்சு விமானங்கள் பரவலாக குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டன என்று தெரிவிக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### இனந்தெரியாத சடலங்கள் ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

சாவகச்சேரி பதில் மஜிஸ்திரேட்டின் உத்தரவின் பேரில் இனந்தெரியாத இரு இளைஞர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரிப் பொலீஸாரால், யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் மாலை ஒப்படைக்கப்பட்டன.

சாவகச்சேரி தனங்கிளப்புப் பகுதியில் இருந்து மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட இச்சடலங்களில், உடலின் பெரும்பாலான இடங்களில் வெடிச்சிதறல்களின் காயங்கள் காணப்பட்டன.

சுமார் 25 வயது மதிக்கதக்கவர்களின் இந்த இரு சடலங்களும், பிரேத பரிசோதனையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டன. (இ-15)

## இலங்கை கடற்படையினர் மீண்டும் துப்பாக்கிச் சூடு!

### இந்திய மீனவர் ஒருவர் காயம்

தனுஷ்கோடிக்கு அருகே கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 5 இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டதில் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் குறித்து இலங்கை அரசுக்குத் தெரிவித்து இத்தகைய செயல்களைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றுவெளியுறவுத் துறையை தமிழக அரசு கேட்டுக் கொண்டிருப்பதாக மாநில மீன்வளத்துறை அமைச்சர் திருமதி ஜெனிபர் சந்திரன் தெரிவித்துள்ளார். (இ-5)

## வாவி ஓரப் பங்கருக்குள் இருந்த விமானப்படைச் சிப்பாய் பலி!

### நீந்தி வந்த புலிகள் சுட்டனராம்!!

கொழும்பு, பெப். 2

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள திமிலைத்தீவு என்ற இடத்தில் வாவியோரத்தில பங்கருக்குள் இருந்த விமானப்படைவீரர் ஒருவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷப்றா

### யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் நிறுவனத்தில் வைப்புச் செய்தவர்களுக்கு மூன்றாவது கட்ட மீளளிப்புத் தொகை (மிகுதியில் 10%) இப்போது கொழும்பில் வழங்கப்படுகிறது.

கொழும்பு செல்ல முடியாத யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வைப்பிலிட்டோர் நலன் கருதி கீழ்க்கண்ட விலாசத்தில் தற்காலிக விசாரணை அலுவலகம் இயங்குகிறது.

**இல: 308 1/3, (மேல் மாடி), கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

அலுவலக நேரம்: கிழமை நாள்களில்
முற்பகல் 9-30 மணி முதல்
பிற்பகல் 1-30 மணி வரை திறந்திருக்கும்.

பாதுகாப்பு அரணுக்கு வெளியே வதிவோர் சனி, ஞாயிறு தினங்களில் ''பத்ம வாசம்'' (மூளாய் வீதி), வட்டுக்கோட்டை என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளலாம்.

விவரங்களைத் திரட்டி கொழும்புக்கு அனுப்ப வேண்டியுள்ளதால், வைப்பிலிட்டோரை தமது வைப்புச் சான்றிதழுடன் வருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- முகாமைத்துவ பிரதிநிதி
(முன்னாள் யாழ். இணைப்பாளர்)

(சி/47)

## கனகு கறாஜ்

### திருநெல்வேலி

எம்மிடம் நீண்டகாலமாக விடப்பட்டு திருத்த முடியாத நிலையிலுள்ள வாகனங்களை மட்டும், இட நெருக்கடி காரணமாக அவற்றின் சொந்தக்காரர்கள் உடனடியாக அப்புறப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வழமை போன்று திருத்தவேலைகள் நடைபெறுகின்றன என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

— உங்கள் ஆதரவுக்கு நன்றி —

**உரிமையாளர்: பொ. கனகரத்தினம்**
(கனகு)

(45054)

## புதிய ஆங்கில வகுப்புக்கள்

**ENGLISH LANGUAGE**
year - 6 — Year - 11

**LITERATURE**
year - 9 — year - 11

**புதிய வகுப்புக்கள்: 05-02-1997**
(3-30 P.m.) Standard Time

விவரங்களுக்கு: **NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
2nd Cross Street, Jaffna.

(45046)

## சதாபொன்ஸ் வாழ்த்துகின்றது

எமது கல்வி நிலையத்தில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வகுப்புக்களை நடத்திய ஆசிரியர் **திரு. வை. சிவசுப்பிரமணியம்** அவர்களையும் சக ஆசிரியர்களையும் சித்தியடைந்த மாணவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | சு. வேணுகானன் | - 147 | புள்ளிகள் |
| 2. | ச. அச்சுதன் | - 146 | ,, |
| 3. | இ. நவநீதன் | - 129 | ,, |
| 4. | இ. ரகீஷன் | - 123 | ,, |
| 5. | த. தர்சினி | - 102 | ,, |
| 6. | ச. கோரட்சன் | - 101 | ,, |
| 7. | கி. சிவராசபவன் | - 99 | ,, |

ஆகியோரையும் மனமார வாழ்த்துகின்றோம்.

**இயக்குனர், அப்பண்ணா, ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள்.**

சதாபொன்ஸ்,
அல்வாய்.

(45058)

## கண்ணீர் அஞ்சலி

### உயர்திரு மு. வீரசிங்கம்

ஊரெழுவைப் பிறப்பிடமாகக் கொண்டு ஊரெழு கிளானையம்பதி ஸ்ரீபர்வதபத்தினி அம்பாள் ஆலய நிர்வாகத்தில் இருந்து நீண்டகாலம் கோயிற்பணி செய்த உயர்திரு மு. வீரசிங்கம் 31 - 01 - 1997 வெள்ளிக்கிழமை இவ்வுலகை நீத்துள்ளார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அவருடைய ஆன்மா சாந்தியடைய அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம். அவர் பிரிவினால் துயரும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம.

**பரிபாலன சபையினர்**
**கிளானையம்பதி ஸ்ரீபர்வதபத்தினி அம்பாள் ஆலயம்**

ஊரெழு.

(45055)

## செவ்வாயன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணம், பெப். 2

திருகோணமலை — காங்கேசன்துறை பயணிகள் கப்பல்சேவை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கிறது.

கப்பலில் செல்ல சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல் இல. 188 முதல் 202க்கு இடைப்பட்ட பட்டியல்களில் பெயர் உள்ளவர்கள் தமது பயணத் திகதியை சிவில் அலுவலகத்தில் உறுதிசெய்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நேற்று திருமலைக்கு புறப்பட்ட கப்பலில் செல்ல மத்திய கல்லூரிக்கு வந்து, இடம் கிடைக்காது திரும்பியவர்கள் சிவில் அலுவலகத்தில் பதிவு செய்யாது இக்கப்பலில் பயணம் செய்யலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-3)

## நல்லூர் கல்விக் கோட்ட அதிபர் கூட்டம்

குருநகர், பெப். 2

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் யாழ். கல்வி வலயம் — 1 இன் கல்விப் பணிப்பாளர் வ. தானையா தலைமையில் நடைபெறும்.

(இ-51)

## டாக்டர் இல்லாத ஆஸ்பத்திரி

தென்மராட்சி, பெப். 2

வடமராட்சி கிழக்கு மருதன் கேணி ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய ஒரேயொரு டாக்டரும் கொழும்புக்குச் சென்று விட்டதால் இப்பகுதி நோயாளர்கள் பளை, சாவகச்சேரி, மந்திகை ஆஸ்பத்திரிகளுக்குச் செல்லவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## "BOSCO INSTITUTE"

25, றக்கா றோட்,
யாழ்ப்பாணம்.

**SPOKEN ENGLISH**
With
**GRAMMAR BY. BRITTO**

ஆரம்பம்:
**03-02-1997**
காலை 6-30 மணி

**O/L Day Class - 97**
ஆரம்பம் :**05-02-1997**
காலை 9-00 மணி

(45060)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## FACULTY OF SCIENCE

The Second Half of the First Semester (1995/96 batch) and Second Half of the Second Semester (1994/95 batch) for the First year students will commence on Monday 3-2-1997.

**Registrar.**

(உ/48)

**யாழ். மாணவர்களுக்கு ஒரு நற்செய்தி!**

மீண்டும் யாழ். நகரில்!

**கணிதம்: திரு. B. P. பாஸ்கரன்**

**ஆரம்பம்:- 15-02-1997**

## எடிசன் அக்கடமி

411/1, கே.கே. எஸ். வீதி, (யாழ். இந்து அருகில்)
யாழ்ப்பாணம்.

(45057)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கமலாம்பிகை பசுபதி

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த திருமதி கமலாம்பிகை பசுபதி நியூசிலாந்தில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற டாக்டர் வி. ரி. பசுபதியின் அன்பு மனைவியும், புவனேஸ்வரி, டாக்டர் வைத்தீஸ்வரா, சிவகுமாரன், முத்துக்குமாரசாமி, டாக்டர் ஜெகதீசன், டாக்டர் யோகு ஆகியோரின் அன்புத் தாயாரும், ரட்ணசபாபதி, சிவபாக்கியம், புனிதம், ஜஷா, டாக்டர் நிர்மலா, டாக்டர் நளாயினி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்;
**டாக்டர் க.தா.சிவபாதம்,**
டச்சு வீதி,
சாவகச்சேரி.

84, 86, Portland Rood,
Remuera,
Auckland 5.

(சி/46)

## இராமுப்பிள்ளை கனகராஜா

(அம்மன் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்)

கந்தர்மடம் மணல்தறை ஒழுங்கையை வதிவிடமாகக் கொண்ட இராமுப்பிள்ளை கனகராஜா 1-02-1997 சனிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் சரோஜினிதேவியின் (ஓய்வு பெற்ற புள்ளிவிவர ஆய்வாளர்,) அன்புக் கணவரும், வைதேகி (கனடா), காவேரி (யாழ். மருத்துவபீடம் 2 ஆம் வருடம்), வானதி (கொழும்பு), சாமந்தி (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராமுப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், பிறைசூடியின் (கனடா) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 02-02-97 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்**

16/1 மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம்.

(45053)

## திருமதி வைத்திலிங்கம் பாக்கியம்

ஊரெழுவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி வைத்திலிங்கம் பாக்கியம் 26-01-97இல் வவுனிக்குளத்தில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற க. வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், துரைராசா, காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவயோகமலர், கிருஷ்ணமூர்த்தி (ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, யாழ்ப்பாணம்), சிவலிங்கநாதன் (S. V. M. பிறைவேற் லிமிடெட், யாழ்ப்பாணம்), றங்கநாதன் (கனடா), சிவநேசமலர், ஸ்ரீதரன் (A C I. லிமிடெட், இரத்மலானை) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பரமானந்தன் (உதவிப் பொலீஸ் பொறுப்பதிகாரி) மற்றும் ஞானச்சந்திரன் (ஆசிரியர், சைவ வித்தியாலயம், மயிலணி, சுன்னாகம்), அரியமலர், மீனா, கெங்காதேவி, பவானி ஆகியோரின் அன்பு மாமியும், திருமதி தமயந்தி இந்திரநாதன் (கனடா), திருமதி சுமதி பிரதீபன் (கொழும்பு), பார்த்திபன் (காட்டூன் பல்கலைக்கழக பொறியியற் பீட இறுதி வருட மாணவன், ஒற்றாவா, கனடா), ஜெயந்தி சாந்தி, அகிலன், கோகுலன், அகலியா, தர்ஷி, ஜெயதீபா, ஜெயதர்ஷன், பிரசாத், வினோத், பாரத், ஆர்த்திகா, பிரியங்கா, நிஷாந்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், துஷிகா, ஷானுகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26.01-97 இல் வவுனிக்குளத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார். உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**வை. சிவலிங்கநாதன்**
(மகன்)

ஊரெழு வடக்கு,
சுன்னாகம்.
தற்போதைய முகவரி:
19, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

(45047)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் நூலகம்

# பெரும்பான்மையினரின் உரிமைகள் பறிபோவதாக எழுந்துள்ள கூச்சல்!

**சிறிலங்காவின் இனப்பிரச்சினை உச்சக் கட்டத்தை அடைந்து வரும் இவ்வேளையில் சிங்கள மக்களின் குறைகளைக் கண்டறிய ஆணைக்குழு நியமிக்கப்பட்டு அதன் விசாரணைகளும் ஆரம்பமாகியுள்ளன. அது பற்றிய ஆய்வுரைக் கண்ணோட்டம் இது.**

உலகில் சிறிலங்கா என்று ஒரு நாடு உள்ளது. அந்த நாட்டின் அரசமைப்பு தனியே ஜனநாயகக் கோட்பாடுகளை மாத்திரம் கொண்டிருக்கவில்லை. சோஷலிச சித்தாந்தங்களையும் பின்பற்றியதாக ஜனநாயக குடியரசு என அது பெயர் கொண்டுள்ளது. அந்த நாட்டில் பல காலமாக இனப்பிரச்சினை என்று ஒன்று உள்ளது. அதுவும் கடந்த 14 ஆண்டுகளாக ஆயுதப் போராட்ட வடிவம் பெற்று மரபுவழி யுத்தமாக மாறியுள்ளது.

அந்த நாட்டின் அரசு அப்படியான ஒரு பிரச்சினை ஒன்று இருக்கிறது. என்பதை ஏற்றுக் கொண்டுள்ளது. தற்போது நடைபெற்றுவரும் போருக்கு முடிவுகாண அந்த அரசு முனைகிறது. தீர்வுத் திட்டம் என்ற ஒன்றை அறிமுகப்படுத்தி பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிக்கிறது.

அரசின் இந்த முயற்சிகள் சிறுபான்மையினரின் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதை ஒரு புறத்தில் ஏற்கும் வேளையில் மறுபுறத்தில் அந்த மறுக்கப்பட்ட உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதையே எடுத்துக்காட்டுகின்றன.

அப்படியானால் சிறுபான்மையினரின் பிரச்சினைகள் யாவை? அவர்களது உரிமைகளை அங்கீகரிக்க அல்லது வழங்க மறுப்பவர்கள் யார்?

ஆட்சியில் எந்த அரசு இருந்தாலும் அந்த அரசுகளால் துணிகரமாக, தீர்க்கமாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாமைக்கான காரணம் பெரும்பான்மையினரின் ஆதரவை இழக்க நேரிடும் என ஆட்சியில் இருப்பவர்கள் அச்சம் கொள்வதாலே ஆகும்.

அனைத்து உரிமைகளையும் அனுபவித்துவரும் அதே வேளையில் சிறுபான்மையினருக்கு பிரச்சினைகள் உண்டு என்பதை ஏற்காத—

அவர்களின் உரிமைகளை வழங்க விரும்பாத — பெரும்பான்மையினருக்கும் தற்போது பிரச்சினைகள் உள்ளன என்று குரல் எழுப்பப்படுகிறது.

அவர்களின் உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவைபற்றி விசாரிக்க அரசு விசாரணை ஆணைக்குழு ஒன்றையும் நியமித்துள்ளது.

பசியால் வாடும் ஏழைக்கு ஒரே ஒரு பிரச்சினை தான் உள்ளது. அது உண்ண உணவில்லையே என்பதாகும்.

ஆனால் செல்வந்தனுக்கு இரு பிரச்சினைகள். பசி எடுக்கவில்லை என்பது முதலாவது பிரச்சினை. அதற்கு ஏதாவது மருந்து எடுக்க வேண்டும். அப்படி பசி எடுத்த பின்னர் உணவு உண்டால் ஜீரணிக்கவில்லையே என்பது மறுபிரச்சினை. அதற்காக மற்றொரு மருந்து எடுக்கவேண்டும்.

செல்வந்தனுக்கும் இவைகள் பிரச்சினைகள் தான். ஆனால் பசியால் வாடும் ஏழை துடிப்பது அவன் கண்களுக்குத் தெரியவில்லையே. இதுதான் இன்றைய யதார்த்தம்.

பெரும்பான்மைச் சிங்களவர்களின் பாதிக்கப்பட்ட உரிமைகள் பற்றி ஆராய அரசால் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முன்னாள் உயர் நீதியரசர் எஸ். டபிள்யூ. வல்பிட்ட தலைமையில் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவில் அனுபவம் மிக்க முன்னாள் அதிகாரிகள் மற்றும் கல்விமான்கள் ஆகியோர் அடங்கியுள்ளனர்.

முதலில் இந்த ஆண்ணைக் குழுவை அரசு தற்போதாவது நியமித்தது பற்றியும் அதன் பணிகள் பற்றியும் ''திவயின'' சிங்கள நாளிதழின் ஆசிரியர் தலையங்கத்தைப் பார்ப்பேம்.

### ஆசிரியர் தலையங்கம்

''சிறிலங்காவானது அந்நியரின் ஆட்சிக்கு உட்பட்டதாலேயே முன்னேற்றம் அடைந்தது என நம்புவோர் இன்னும் இங்கு இல்லாமலில்லை. வெகு சிலரே அவ்வாறான நம்பிக்கையைக் கொண்டிருக்க முடியும்.

''போர்த்துக்கீசர் தொடங்கி ஒல்லாந்தர், பிரிட்டிஷார் வரை இந்த மூன்று அந்நிய ஏகாதிபத்திய சக்திகளும் எங்கள் நாட்டை சுரண்டி சூறையாடின என்பது இந்நாட்டு மக்களில் பலருக்கு தெரியாத ஒன்றல்ல.

''குறிப்பாக நூற்றாண்டுகளுக்கு மேலாக இந்த நாட்டை முழுவதுமாக ஆட்சி செய்த பிரித்தானியர்கள் இந்த நாடு பிழியப்பட்டு சக்கையாக வீசப்படும் வரை சுரண்டினர். அத்துடன் செழிப்பான எமது காணிகளைக் கொள்ளையடித்து தேசிய விவசாயத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்தனர்.

''பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த இடங்களில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட இந்நாட்டைச் சேர்ந்த பெருமளவிலான மக்கள் தங்களுக்குப் பொருந்தாத, பழக்கமில்லாத இடங்களுக்குச் சென்று தமக்குப் பழக்கமில்லாத தொழிலை மேற்கொண்டு வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது.

''இந்த ஏகாதிபத்தியவாதிகள் எங்கள் நாட்டை விட்டுச் சென்றபோது எங்களுக்கு எஞ்சியது பெருந்தோட்டப் பயிர்களுக்காக மாற்றப்பட்டு செழிப்புத் தன்மைகள் யாவற்றையும் இழந்த வரண்ட நிலங்கள் மாத்திரமின்றி குறைந்த சம்பளத்திற்கு வேலை வாங்குவதற்காகக் கொண்டுவரப்பட்ட இந்தியத் தொழிலாளர்களுமே.

''தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் வெவ்வேறு வடிவில் உருவாகி வந்த வேளையில் இந்த நாட்டைச் சேர்ந்த சில வியாபாரிகளும் தனவந்தர்களும் ஏழை மக்களின் பாரம்பரிய இடங்களை உடனடியாக கையகப்படுத்தினர்.

''பல நூறு ஆண்டுகளாக இந்த நாட்டைப் — குறிப்பாக மலையகத்தை — போஷித்து அதனால் போஷிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்து தங்கள் காணிகளின் உரிமையைப் பேணும் வாய்ப்பை இழந்தனர்.

''காலம் கடந்த போதிலும் தற்போது அமைக்கப்பட்டுள்ள சிங்கள ஆணைக்குழுவானது துன்புற்ற அந்த மக்களுக்கு ஆறுதலை வழங்கும் என்றே கூறலாம்'' —

இவ்வாறு திவயின நாளிதழின் ஆசிரியர் தலையங்கம் கூறுகிறது.

### தியவதன நிலமே தெரிவித்த கருத்துக்கள்

சிங்கள ஆணைக்குழு அண்மையில் கண்டியிலுள்ள அஸ்கிரிய சர்வதேச பௌத்த நிலையத்தில் கூடிய போது முதலில் சாட்சியமளித்த தலதா மாளிகையின் தியவதன நிலமே நிரெஞ்சன் விஜேரத்தின மேற்கண்டவாறு ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தார்.

ஆணைக்குழுவின் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட வேளையிலேயே, நிரெஞ்சன் விஜேரத்ன தெரிவித்த கருத்துக்கள் நாட்டுப் பற்றுக் கொண்ட, இனப்பற்றுக் கொண்ட அனைவரது கண்களையும் திறக்கும் விதத்தில் அமைந்துள்ளன.

தலதா மாளிகையின் தியவதன நிலமே நிரெஞ்சன் விஜேரத்ன சிங்கள ஆணைக்குழு முன் அளித்த சாட்சியத்தை இப்போது பார்ப்போம்.

''விஹாரைகள், பௌத்த வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான காணிகளைத் தனியார்கள் கைப்பற்றி அனுபவித்துவருகிறார்கள். இதைத் தடுப்பது மிகவும் கடினமான காரியமாக உள்ளது.

''சில காணிகள் தமிழர்களுக்கும் வேறு இனத்தவர்களுக்கும் விற்கப்பட்டுள்ளன. பௌத்த சிங்களவர்களுக்கும் பரம்பரை பரம்பரையாகச் சொந்தமாக இருந்த காணிகளை தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் கைப்பற்றி அனுபவித்து வருவதும் உண்டு. அண்மையில் இவ்வாறான சம்பவம் தொடர்பாக மடோல்கலவில் கலவரம் கூட ஏற்பட்டது.

''தற்போது இனத்தைப் பற்றிய மதத்தைப் பற்றிய உணர்வுகள் குறைந்து வருகின்றன. நான்கு விடயங்கள் குறித்து நாங்கள் கவனம் செலுத்த வேண்டும். அவை யாவன: எங்கள் தாய்நாடு, எங்கள் மொழி, எங்கள் கலாசாரம், எங்கள் ஆடைகள் என்பன ஆகும்.

'' அரசியல் ஆதாயங்களுக்காக எங்களில் சிலர் தங்கள் ஆடைகளையும் அணியும் முறைகளையும் மாற்றியுள்ளனர். சிங்கள மக்களின் பிரச்சினைகளைக் கண்டறிய நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழு உறுப்பினர்களே தங்களது உடை விடயத்தில் கவனத்தைச் செலுத்தவில்லை. இவர்கள் அடுத்த அமர்விலாவது சிங்களக் கலாசாரத்திற்கு அமைய உடைகளை அணிந்து வருவார்கள் என எதிர்பார்க்கிறேன்'' எனத் தெரிவித்தார்.

அடுத்து சாட்சியமளித்த சட்டத்தரணி காமினி ஈரியகொல்ல தனது சாட்சியத்தில் பின்வருமாறு கூறினார்.

'' எமது நாட்டு ஆட்சியாளர்கள் தேசியத்தை அழிக்கின்றனர். ஒரு சத்தியக் கடதாசியைச் சமர்ப்பித்து பிரஜா உரிமையைப் பெறக்கூடிய ஒரே ஒரு நாடு சிறிலங்கா மாத்திரமே.

'' தற்போது நாட்டை வலயங்களாக பிரிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐ தே. கட்சியும் சிங்களவர்களின் வாக்குகளைப் பெறும் முயற்சியிலேயே இது வரை காலமும் ஈடுபட்டன. சிறுபான்மையினர் தங்களது வாக்குகளை இக்கட்சிகளுக்கு ஏலத்தில் விற்றனர். இவ்வாறான தலைவர்கள் இருக்கும் வரை சிங்கள இனத்திற்கு விடிவு இல்லை.

''கிராமப் புறங்களிலுள்ள சிங்களவர்களைக் கொன்று உரிமைகளைப் பெறும் முயற்சிகள் நடைபெறுகின்றன. ஈழத்தைப் பெறுவதற்காக தமிழர்களில் ஒருபகுதியினர் போரிடுகின்றனர். ஈழம் என்றால் என்ன? அது சிங்களத் தீவான சிறிலங்காவையே குறிக்கிறது. இவ்வாறாக சிங்கள மக்கள் ஏன் கொல்லப்படுகிறார்கள்? சாதாரண தமிழ் மக்கள் இந்தப் படுகொலைகளை அனுமதிப்பதில்லை.

''இந்த நாட்டிலுள்ள அதிகமான தமிழர்களும் முஸ்லிம்களும் இந்த நாடு சிங்களத் தீவு என்பதையும் சிங்களமே அரசாங்க மொழியாக இருக்க வேண்டும் என்பதையும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

'யுத்தத்தைமேற்கொண்டாகுதல் இந்த நாட்டை நாம் பாதுகாக்க வேண்டும் — எனத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாதவரை நாட்டில் அமைதியை உருவாக்க முடியாது; சரிந்த பொருளாதாரத்தை மீண்டும் நிலை நிறுத்த முடியாது என்பதை யாவரும் அறிவர். மறுக்கப்பட்ட உரிமைகள் வழங்கப்பட வேண்டும். என்ற மனப்பக்குவம் வரும் வரை நிறைவேற்றப்படும். சட்டங்களால் எதுவித பயனும் ஏற்படப் போவதில்லை. தனிச் சிங்களச் சட்டம் பௌத்தத்திற்கு முதலிடம் போன்றே பௌத்த சிங்கள மக்களின் ஆதரவைப் பெறும் முயற்சியே இந்த ஆணைக் குழு விசாரணைகளும் எனலாம். தென்னிலங்கை அரசியல் கட்சிகள் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற காலத்திற்குக் காலம் எடுத்துவரும் முயற்சிகளின் மற்றொரு அத்தியாயமே இந்த விசாரணை ஆணைக்குழு என்று பரவலாகக் கருதப்படுகிறது.

— அம்புஜன்

# போர்போஸ் பீரங்கிப் பேர ஊழல் புலனாய்வு விசாரணை விரைவில்

பெங்களூர், பெப். 2

போர்போஸ் பீரங்கிப் பேர ஊழல் தொடர்பான அனைத்து விவரங்களும் பெயர்களும் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னதாகத் தெரிந்துவிடும் என இந்திய மத்திய புலனாய்வுத்துறை இயக்குநர் ஜோகிந்தர் சிங் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் எனவும் —

மேலதிக புலனாய்வுத் துறை இயக்குநர் ரேவண்ணா சித்தையா தலைமையில் அமைக்கப்பட்டுள்ள 12 உறுப்பினர் குழு அடுத்தவாரம் முதல் சாட்சியங்களை விசாரிக்க ஆரம்பிக்கும் எனவும் — ஜோகிந்தர் சிங் பெங்களூரில் தெரிவித்தார்.

(இ-10)

## தனது அரசியல் எதிரியை பதில் அதிபராக்கும் மண்டேலா

தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா அடுத்த வாரம் சுவிட்சர்லாந்துக்கு விஜயம் செய்யும்போது தனது அரசியல் எதிரியாக இருந்துவரும் யுளு இனத்தைச் சேர்ந்த உள்துறை அமைச்சரை பதில் அதிபராக நியமனம் செய்யத்தீர்மானித்துள்ளார்.

நாடாளுமன்ற மேல் சபையில் மண்டேலா இதனை அறிவித்த போது 78வயதான மண்டேலா வயதான நிலையில் ஏதோ வேடிக்கையாகப் பேசுகிறார் என உறுப்பினர்கள் கிண்டல் செய்தனர்.

மண்டேலாவின் அரசியல் பெருந்தன்மைக்கு இந்த நியமனம் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

(இ-10)

# குற்றச்சாட்டுகளுக்கு கிளின்ரன் மறுப்பு

வாஷிங்டன், பெப். 2

அமெரிக்க அதிபர் தேர்தலின் போது முறைகேடாக தேர்தல் நிதி வசூலித்ததாக அதிபர் பில் கிளின்ரன் மீது எழுந்துள்ள குற்றச்சாட்டு அமெரிக்க அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

சுமார் 3 இட்சத்து 50 ஆயிரம் பெயர்கள் அடங்கிய தேர்தல் நிதி அளித்தவர்களின் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு அவர்களில் மிகத் தாராளமாக நிதி அளிப்பவர்களுக்கு, கிளின்ரன் மறுபடியும் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு தகுந்த சன்மானம் வழங்கப்படும் என்ற ஓர் இரகசியமான உடன்பாடு இருந்ததாக வெள்ளை மாளிகை கணனித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிதி வழங்குபவர்களின் பட்டியல் தயாரிக்கப் பட்டிருக்கலாம். ஆனால் பிறகு அவர்களைத் தகுந்த முறையில் கவனித்துக் கொள்வதாகக் கூறப்படுவது உண்மைக்குப் புறம்பானது என கிளின்ரனும் அவரது மனைவியும் மறுத்துள்ளனர்.

(இ-10)

## உலக அரங்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்பிரச்சினையில்

## ஐ.தே.கவின் உத்தி மாறுகின்றது

கொழும்பு, பெப். 2

விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தியோ அல்லது போர் நடத்தியோ இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று ஐ.தே.க. தேர்தலில் பிரசாரம் செய்கிறது. ஐ.தே.க. தற்போது தனது உத்தியை மாற்றியுள்ளது.

கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளது.

பேச்சு அல்லது போர் மூலமே தீர்வு என்ற ஐ.தே.க. புதிய நிலைப்பாட்டை எடுத்துள்ள அதேநேரம் அரசின் தீவிரமான போர் உத்தியை அது விமர்சித்துமுள்ளது.

தமது ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட உத்தியே சரி எனவும் பிரசாரம் செய்து வருகிறது — என்று அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ-3-150)

## புகையிலைச் செய்கை

கொழும்புத்துறை, பெப். 2

இடம்பெயர்ந்து சென்று தற்போது மீண்டும் தீவுப் பகுதி திரும்பும் மக்கள் புகையிலைச் செய்கையில் அதிக ஆர்வங்காட்டி வருகிறார்கள்.

இருந்தும் இதற்குரிய கிருமிநாசனி மருந்து இல்லாமல் இச்செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் பெரும் சஷ்டத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது. (இ-30)

## 84 ஆயிரம் கோழிக் குஞ்சுகள் யாழ். மாவட்டத்தில் விநியோகம்

யாழ்ப்பாணம், பெப், 2

கடந்த ஆண்டில் கொழும்பிலிருந்து விமானம் மூலம் தருவிக்கப்பட்ட 70 ஆயிரம் ஒரு நாள் குஞ்சுகள் யாழ். மாவட்டத்தில் விநியோகிக்கப்பட்டன. இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் சுமார் 14 ஆயிரம் குஞ்சுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து விநியோகிக்கப்படவுள்ளன.

மேற்கண்டவாறு கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள செய்திக் குறிப்பொன்றில் தெரிவித்துள்ளது.

விநியோகிக்கப்படும் குஞ்சுகளுக்கு 14 ஆம் நாளிலும், 35ஆம் நாளிலும் கம்புறோ நோய்க்கெதிரான தடுப்பு மருந்து நீருடன் கலந்து கொடுக்கப்படுகின்றது.

21 ஆம் நாளில் கோழிக் கொள்ளை நோய்க்கெதிரான தடுப்பு மருந்து நீருடன் கலந்து கொடுக்கப்படல் வேண்டும்.

இவை யாவும் குஞ்சுகள் விநியோகிக்கப்படும் கால்நடை வைத்திய பிரிவுகள் மூலம் குறிப்பிட்ட நாள்களில் பண்ணையாளர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

பண்ணையாளர்கள் தவறாமல் உரிய நாள்களில் மேற்படி தடுப்பு மருந்துகளைப் பெற்று தமது கோழிகளுக்கு வழங்குதல் அவசியமாகும். குறிப்பிட்ட நாள்களில் கோழிகளுக்கு தடுப்பு மருந்துகளை வழங்காதுவிடுவதன் மூலம் நோய்கள் ஏற்பட்டு பண்ணையாளர்களின் கோழிக்குஞ்சுகள் இறப்பதுடன் நோய் ஏனைய பண்ணைகளுக்கும் பரவுவதால் பொருளாதார ரீதியில் கோழி வளர்ப்பாளர்கள் நட்டமடைய நேரிடும். இதனால் யாழ் மாவட்டத்தில் நல்லின கோழி வளர்ப்பும் பாதிக்கப்படும் நிலை ஏற்படலாம்.

எனவே கோழிவளர்ப்பாளர்கள் நோய்த்தடுப்பு மருந்துகளை உரிய நேரத்தில் பெற்று வழங்கி தமது ஒத்துழைப்பை நல்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


## விற்பனைக்கு உண்டு

அடையாள அட்டை லெமனட்டிங் பிலிம், றேடியோ, வீடியோ - ஓடியோ கசட், பிலிம்றோல், பற்றறி வகை, போட்டோ பிரதி ரோணர் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**செல்வம் களஞ்சியம்**
**இல. 330, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(45048)

வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

## ஆண்டு- 6 அனுமதி

ஆண்டு 6 அனுமதிக்காக விண்ணப்பித்தவர்களுள் புலமைப்பரிசில் பரீட்சையில் 104 புள்ளியும் அதற்கு மேலும் புள்ளி பெற்ற மாணவர்களின் பெற்றோர் மட்டும் 03-02-1997 திங்கள் காலை 10 மணிக்கு பாடசாலைக்குச் சமுகம் கொடுக்கவும்.

**- அதிபர்**

(சி/44)

EMILY ERNESTINE MEMORIAL
**ELDERS HOME**

## எமிலி ஏனர்ஸ்ரைன் ஞாபகார்த்த முதியோர் இல்லம்

விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் மேற்படி இல்லத்திற்கு ஆண், பெண் முதியோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்,

★ உணவு, உடை, இருப்பிட வசதிகள் முற்றிலும் இலவசம்.

**இயக்குநர்**
**எமிலி ஏனர்ஸ்ரைன் ஞாபகார்த்த நிலையம்.**

கண்டிவீதி,
சாவகச்சேரி.

(45032)


## நுளம்பினால் பரவும் நோய்கள்; தடுக்கும் திட்டம் நடைமுறையில்!

அண்மைக் காலங்களில் இப்பகுதி நிலைமைகள் காரணமாக எமது சூழல் பாதிப்பினால் சில நோய்கள் மீண்டும் தலைதூக்கியுள்ளதைக் காண்கின்றோம். குறிப்பாக இடிபாடுகள், மலசலகூட வெடிப்புகள், மனித சஞ்சாரம் இல்லாத பகுதிகள், உடைந்த வாய்க்கால்கள் போன்றவற்றினால் நீர் தேங்கி நுளம்பு உற்பத்தியை கூட்டியுள்ளது. இத்துடன் குழாய் நீர் கிடைக்கப் பெறாமையினால் நீர் சேமித்து வைத்தல் மற்றும் பல காரணங்களினால் நுளம்புத் தொல்லையும், அதனால் பரவும் நோய்கள் குறிப்பாக மலேரியா, டெங்குக் காய்ச்சல் பரவுவதை அவதானிக்க முடிகிறது. அத்துடன், நிரந்தரமாக மலேரியா, டெங்கு இருக்கும் பகுதிகளில் இருந்து மக்கள் யாழ். நகரப் பகுதிகளுக்கு மீண்டும் வருவதனால் இந் நோய்கள் பரவும் அபாயம் உள்ளது.

மலேரியாத் தடுப்பு இயக்கத்தின் செயற்பாடுகள் முடங்கியிருப்பதனால், யாழ். மாநகர சுகாதாரப்பகுதியில் இருக்கிற வளங்களைக் கொண்டு இந்நோய்களைக் கட்டுப்படுத்த ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் ஊழியர்கள், தொண்டர்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு மாசி 1 ஆம் திகதி முதல் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் பகுதி பகுதியாகச் செயல்படுத்தப்படுகிறது. இதில் நகரக் குடியிருப்பாளர்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும் தமது இல்லங்களை அண்டிய பகுதிகளை எம்முடன் இணைந்து சுத்தமாக வைத்திருப்பதனால் நுளம்பு உற்பத்தியை இல்லாமல் செய்பலாம் நோய் கண்டவுடன் தகுந்த சிகிச்சை பெறுவது அவசியம்.

> யாழ். மாநகரசபைப் பிரதேசத்தில் நுளம்பினால் பரவும் நோய்களைத் தடுக்கும் திட்டம் நேற்று சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர் தெய்வேந்திரன் விடுத்த விளக்கம்;-

மாநகர சபையின் சுத்திகரிப்புப் பகுதியினர், மற்றும் வேலைப்பகுதியினர் நுளம்பு உற்பத்தியாகும் பொது இடங்கள், மற்றும் வெடித்த மலசலகூடக்குழிகள் பற்றிக் கவனம் செலுத்துவார்கள் சுகாதாரப்பகுதி ஊழியர்கள் இத்திட்டத்தில் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்து இந் நோய்களை ஒழித்துக்கட்ட மலத்தியோன் கிடைத்ததும் தெளிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மலத்தியோன் தெளிப்பது மலேரியாத் தடுப்பியக்கத்தின் ஒத்துழைப்பைப் பொறுத்தது எம்மால் இயன்றதைச் செய்து முடிந்தால் இவ்விந நோய்களைக் கட்டுப்பாட்டில் கொண்டு

(7 ஆம் பக்கம் பார்க்க)

## ஏழைகளுக்காக உள்ளம் வெதும்பிய வேதாந்தி சுவாமி விவேகானந்தர்

இன்று சிலர் சாஸ்திர ஆராய்ச்சி செய்கிறார்கள். அவர்களின் வாழ்நாளில் முக்காற்பங்கு இதிலே செலவிடப்படுகின்றது. ஆனால் இவர்களிடையே மனிதநேயம் என்பது கிடையாது. சகோதரர்கள் துன்பப்படுவதைப் பார்த்தும் சிறிதும் கண் கலங்கா நிலையினை நாம் பல சந்தர்ப்பங்களில் அவதானித்துள்ளோம்.

சுவாமி விவேகானந்தருக்கிருந்த சாஸ்திர அறிவு அபாரம். அதனைவிட சுவாமிஜிடம் இருந்த இரக்கம், இருதயத்தில் உள்ள கசிவு அளவிடற்கரியன ஒரு நாள் சுவாமி விவேகானந்தர் தனது சீடர் ஒருவருக்கு வேதங்களைப் பற்றி சங்கராச்சாரியார் கூறிய கருத்துக்களை விமர்சித்துக் கொண்டிருந்தார்.

இடையில் அந்தச்சிடரானகிர்ஷசந்திரரை நோக்கி; ''நீவிர் கிருஷ்ணரை'' விஷ்ணுவை விட்டுவிட்டு வேதாந்தம் படிக்க வருகிறீரா?'' என்றார் மேலும் சுவாமிஜி. ''நீர் உமது காலம் முழுவதும் இவர்களது வழிபாட்டில் செலவழித்தீரே தவிர, வேதங்களின் முடிவு சாஸ்திர ஞானம் எதுவும் உமக்குத் தெரியாது'' என்றார். சுவாமிஜியின் உள்ளுணர்வை நன்கறிந்த நாடக வல்லுனரான கிரீஷ் சந்திரகோஷ், கவிதை வடிவில் ஏழைகளின் துயர்களை, பெண்களுக்கு ஏற்பட்டுள்ள இழிவு நிலையினை, மக்கள்படும் அவலங்களை சுவாமிஜிக்கு எடுத்து இயம்பினார். மேலும் தயவுசெய்து உங்கள் வேதங்கள் இந்த அவலநிலைக்கு என்ன பரிகாரம் சொல்லுகின்றன என்றும் கேட்டார்

இதைக் கேட்ட மாத்திரத்தே சுவாமி விவேகானந்தர் தன்னையும் மீறிக் கண்ணீர் சொரிய விசும்பி விசும்பி அழுதார். சுவாமிஜியைப் போல் நமக்கு அழுகை வருகிறதா? சிந்தித்துப் பாருங்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சுவாமி விவேகானந்தரைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:

சுவாமி விவேகானந்தருடைய தன்னைப் பற்றிய பெருமை, மிதமிஞ்சிய தன்னப்பிக்கை, சுதந்திரமான வாழ்வும் கருத்தும் சிறப்பானவை இவை யாவும் ஏழைகளின் துயர் கண்டதும் ஆயிரம் இதழ் கொண்ட தாமரை மலர் போல மலர்ந்து, பின்தங்கிய மக்களுக்கு நம்பிக்கையும், ஆறுதலும், பணியும் அருளுகின்றன — என்றார்.

இதனை விளக்க இங்கே ஒரு நிகழ்ச்சியை விவரிக்கலாம் என எண்ணுகிறேன். சுவாமி துரியானந்தரை சுவாமி விவேகானந்தர் ரயில் நிலையத்தில் சந்தித்த பொழுது இவ்வாறு கூறினார்.

''சுவாமி துரியானந்தரே, எனக்கு இன்னமும் உங்கள் சமயத்தைப் பற்றி விளங்கவில்லை. (தனது இருதயத்தில் கையை வைத்து) ஏழைகளிடத்து எனக்கு ரொம்ப இரக்கம் ஏற்படுகிறது. இதை நீவீர் நம்புவீராக'' என்று சொல்லிவிட்டு மேலும் பேச முடியாமல் சுவாமிஜி அழுதார்.



இதைக் கண்ணுற்ற சுவாமி துரியானந்தர் (சுவாமிஜியின் சகோதரசீடர்) இவ்வாறு பின்வருமாறு சொன்னார்;

''சுவாமிஜி இப்படி அழுது நீங்கள் கண்ணீர் விடவும் எனக்கு மிகவும் சங்கடமாகிப் போய்விட்டது. இப்படித்தானே புத்தபெருமான் கண்ணீர் சொரிந்தார். சுவாமியின் நெஞ்சத்தில் ஆழ்ந்து கிடந்த இரக்கம், ஏழைகள் மாட்டு அளப்பரிய அன்பு, ஏழைகளுடைய துயர் தீர்க்கும் நேயம் அவரது வாழ்வில் நாம் கண்ட மகத்தான சேவை இவை யாவும் எனது மனக்கண்ணில் தோன்றின'' - என்றார்.

சுவாமி விவேகானந்தர் வேலூர் மடத்தில் ஒரு நாள் நடுநிசியில் நித்திரைவிட்டு எழுந்து அங்கும் இங்கும் மடத்து விறாந்தையில் உலாவிக் கொண்டிருந்தார். அப்பொழுது நேரம் அதிகாலை சுமார் 2 மணியிருக்கும். சகோதர சீடரான சுவாமி விஞ்ஞானந்தர் இந்தச் செய்கைக்கு விளக்கம் கேட்டார்.

> சுவாமி விவேகானந்தரின் புகழ்பெற்ற சிக்காக்கோ பிரசங்கம் நடைபெற்ற நூறாவது ஆண்டு இது.
>
> அவர் இலங்கைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்த நூறாவது ஆண்டும் இது.
>
> சுவாமியின் 135 ஆவது பிறந்த தினத் திதி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமையாகும்.
>
> இவற்றையொட்டி யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் பாடசாலைகளிலும் விவேகானந்தர் விழாக்கள் நடைபெற்று வருகின்றன.
>
> சுவாமி விவேகானந்தரையும், அவரது ஆன்மீக இயல்புகளையும், கருத்துக்களையும், கொள்கைகளையும் அறிந்து கொள்வது சமய சமூக மேம்பாட்டுக்கு உதவும்.

சுவாமி விவேகானந்தர் உடனே ''எங்கேயோ தூர தேசத்தில் பலர் இன்னல் உறுவதை யான் அநுபவிக்கக் கூடியதாக இருக்கிறது'' என்றார்.

எல்லாருடைய வியப்புக்கும் ஏற்ற வகையில் அடுத்தநாள் செய்தித்தாள்களில் பிஜித்தீவுகளுக்கு அப்பால் எரிமலை ஒன்று வெடித்துப் பலர் மாண்டதாக பிரசுரிக்கப்பட்டிருந்தது. சுவாமி விவேகானந்தர் வெளித் தோற்றத்துக்கு மட்டும் ஒரு வேதாந்தியாக இருந்தார். அவர் உள்ளம் என்றும் ஏழைகளுக்காக வெதும்பியது. இது தான் அவருடைய சுபாவம். சுவாமி விவேகானந்தர் நமக்கு வழிகாட்டுவராக.

— சுவாமி சித்ருபானந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலாபத்தில் பொலிஸார் திடீரென தேடுதல்

சிலாபம் பகுதியில் உள்ள உடப்பு, ஆண்டி முனை ஆகிய தமிழ்ப்பிரதேசங்கள் கடந்த வியாழக்கிழமை காலை பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

சிலாபம் பொலிஸ் நிலையத்தில் இருந்து வந்த ஏராளமான பொலிஸாரால் நடத்தப்பட்ட இத்தேடுதலில் எவரும கைதுசெய்யப்படவில்லை.

சிறுவர் முதல் முதியோர் வரை உடப்பு திரௌபதை அம்மன் ஆலய முன்றலில் கூடுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையையடுத்து, ஆண்களும், பெண்களுமாக 700 பேர் ஆலய முன்றலில் கூடினர்.

இவர்கள் இரு முகமூடிகள் முன் நிறுத்தப்பட்டபின், சகலரும் வீடியோப்படம் எடுக்கப்பட்டனர்.

இத்தகைய தேடுதல் காலை வேளையில் நடத்தப்பட்டதால் பொதுமக்களின் வேலைகள் பாதிக்கப்பட்டன.

ஏராளமான மீனவர்கள் சடலுக்குச் செல்லவில்லை.

## விசாரணை

போயர்ஸ் தோட்டத்து வீட்டில் எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் வீடியோ படங்களையும் புதுக்கோட்டை சட்டப்பேரவை இடைத்தேர்தலில் பயன்படுத்துவதைத் தடுக்கக் கோரி தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தாக்கல் செய்த மனுமீதான விசாரணை நாளை வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(இ-10)

## கூட்டம்

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள கந்தரோடை கிராம சேவையாளர் பிரிவில் இன்று சுன்னாகம் மத்தி, சுன்னாகம் மேற்கு, பிரிவுகளுக்கான விவசாயிகள் சம்மேளனக் கூட்டம் சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையில் நடைபெறும்.

தாவடிவடக்கு, தாவடி தெற்கு தாவடி கிழக்கு பிரிவுகளுக்கான கூட்டம் தாவடி இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

## கொழும்புத்துறை அ. அட்டை

ஜே/70 குருநகர் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுக்குரிய விசேட அடையாள அட்டைகள் எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு கிராம சேவையாளர் பணிமனையில் வைத்து வழங்கப்படும்.

# உடுவில் பிரதேச செயலர் பிரிவு விசேட அடையான அட்டை

வலிகாமம் தெற்கு, பெப்.2

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்குரிய மிகுதி விசேட அடையாள அட்டைகள் பின்வரும் திகதிகளில் வழங்கப்பட உள்ளன.

பெப். 5 ஆம் திகதி இணுவில் தென்மேற்கு (யா/188) சங்குவேலி (யா/187) சுன்னாகம் கிழக்கு (யா/197)

பெப்ரவரி 6 ஆம் திகதி உடுவில் தென் கிழக்கு (யா/183) உடுவில் வடமத்தி (யா/185)

பெப்ரவரி 7 ஆம் திகதி சுன்னாகம் மத்தி (யா/198) குப்பிளான் தெற்கு (யா/210)

(இ-152)

# ஈழத் தமிழர் பாதுகாப்புப் பேரணி; ஈ. என். டி. எல். எவ். வாழ்த்து

சென்னை, பெப். 2

ஈழத் தமிழர் பாதுகாப்புப் பேரணிக்கு வாழ்த்துத் தெரிவித்து ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ.என். டி. எல். எவ்.) அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அறிக்கை வருமாறு:-

இலங்கையில் நடைபெற்று வரும் தமிழ் இன அழிப்பு நடவடிக்கையை உள்நாட்டு விடயம் என்று இந்திய மத்திய அரசு கூறி தலையிடாமல் இருப்பது ஈழத்தமிழ் மக்களை வேதனை செய்ய வைத்துள்ளது.

உலக அரங்கில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக எப்போதும் குரல் கொடுக்கத் தயங்காத இந்தியா ஈழத் தமிழ் மக்கள் விடயத்தில் பாரா முகம் கொண்டிருப்பது அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் தந்துள்ளது.

இந்தியாவின் இன்றைய நிலைப்பாடு காரணமாக செய்வதறியாது திகைத்து நிற்கும் ஈழத் தமிழ் மக்களுக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் அளிக்கும் வகையில் ஈழத் தமிழ் மக்கள் பாதுகாப்பு மாநாடு அமைந்திருக்கின்றது.

ஓர் இயக்கத்தின் நடவடிக்கைகளை மட்டும் காட்டி முழு ஈழத் தமிழ் மக்களின் துயரத்தையும் துடைக்கத் தயக்கம் காட்டிவரும் வேளையில் நீங்கள் துணிச்சலுடனும் நேர்மையாகவும் பிரச்சினைக்கு தீர்வுகாண மேற்கொண்டு வரும் நடவடிக்கையைப் பாராட்டுகிறோம் என்று அந்த அறிக்கை பாட்டாளி மக்கள் கட்சியினையும் அதன் நிறுவனத் தலைவர் ராமதாஸையும் பாராட்டியுள்ளது.

ஈழத் தமிழர் பாதுகாப்புப் பேரணி நேற்று நடைபெற இருந்தது தெரிந்ததே.

# ஆசிரியர்களின் நலனுக்கும் கூட்டுறவுக்கும் உழைத்த இ.பொ.கு.

வள்ளுவர் கண்ட அன்புடைமை' அருளுடைமை, பண்புடைமை ஆகியவற்றுக்கு இலக்கணமாக பெரியோர், சிறியோர், கற்றார், கல்லாதவர் என்ற வேற்றுமை பாராட்டாது, நல்லாசிரியனாக, சமூக சேவையாளனாக, அறங்காவலனாக, தலைசிறந்த கூட்டுறவாளனாக வாழ்ந்து அமர்த்துவம் அடைந்தவர் இ. பொ.குமாரசுவாமி அவர்கள்.

1933ஆம் ஆண்டு உதவி ஆசிரியராக கல்வித் துறையில் இணைந்து சிரேஷ்ட தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்றார்.

1956ஆம்ஆண்டு கோண்டாவில் சைவ வித்தியாசாலை தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்ற பின் அப்பாடசாலையின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்தார். ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்களுடனும் 35க்கும் அதிகமான ஆசிரியர்களுடனும், விஞ்ஞான ஆய்வுகூடங்களுடனும் சைவ வித்தியாசாலையை இந்து மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தினார். அதன் முதல் அதிபராகவும் கடமை ஆற்றிய பின் சேவையில் இருந்து இளைப்பாறினார்.

இ. பொ. குமாரசுவாமி அவர்களை ஆசிரிய உலகில் அறியாதவர்கள எவருமிலர். ஆசிரிய தொழிற் சங்கத்தில் ஈடுபாடு கொண்டு அகில இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்கத்தின் பொருளாளராகவும் யாழ்ப்பாணம் தமிழ் ஆசிரிய சங்கத் தலைவராகவுமிருந்து இருபத்தைந்து வருடங்கள் தொழிற்சங்கத் துறை



யில் ஈடுபட்டு ஆசிரிய உலகின் மேம்பாட்டுக்கு அயராது உழைத்தார்.

ஆசிரிய உலகில் தன்னை அர்ப்பணித்த அதேவேளை கூட்டுறவுத் துறையிலும் தன்னை ஈடுபடுத்தி மக்கள் மேம்பாட்டுக்காக கிராமிய வளர்ச்சியில் ஆர்வத்துடன் உழைத்து வந்தார். கோண்டாவில் ஐக்கிய பண்டக சாலையை ஸ்தாபித்து அதன் தலைவராக கூட்டுறவில் காலடி எடுத்து வைத்தார். அமரர் அவர்கள் வடகுதி விளைபொருள் உற்பத்தி விற்பனவு சமாசத்தின் உபதலைவராகவும், நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் (5 வருடங்கள்) கூட்டுறவு மாகாண வங்கி, வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபை, யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஆகியவற்றின் இயக்குநராகவும், கூட்டுறவு நிறுவனங்கள், கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையங்கள். சலுசகல ஆகியவற்றின் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராகவும் பணிபுரிந்தார். ''கூட்டுறவே நாட்டுயர்வு'' என்ற முதுமொழிக் கிலக்கணமாசத் திகழ்ந்து ஒப்பற்ற கூட்டுறவாளனாக விளங்கினார்.

ஆசிரியத் தொண்டு, கூட்டுறவு சேவை ஆகியவற்றுடன் சமயத்தொண்டிலும் ஈடுபாடு கொண்டு கோண்டாவில் நெட்டிலிப்பாய் விநாயகர் ஆலய பரிபாலன சபையின்தலைவராக இருந்து தனது வாழ்வின் இறுதிக் கட்டத்தைப் பூர்த்தி செய்தார்.

- மு. வாமதேவன்

# திருக்குடும்பக் கன்னியர்கள் 175 ஆம் ஆண்டு நிறைவு விழா

1862 ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 2 ஆம் நாள் இலங்கையிலே முதல் பெண் துறவிகளாக யாழ் மண்ணிலே தம் பாதம் பதித்துப் புனித பணியை தொடங்கியவர்கள் திருக்குடும்ப கன்னியர்கள்.

இவர்களது சபையின் ஸ்தாபகர் முத்திப்பேறுபெற்ற ''பீற்றர் பியன்வெனு நோஜ்'' அடிகளார்.

இவர் பிரான்ஸ் நாட்டவர்.

> திருக்குடும்பக் கன்னியர்கள் 175 ஆம் ஆண்டு நிறைவை யொட்டி இது வெளியிடப்படுகிறது.

பிரெஞ்சு அரசியல் புரட்சிக் காலத்தில் ஒரு புரட்சி வீரனாக உதித்தவர்.

திருச்சபை சோதனைக்கு உட்பட்ட காலம் அது. கோயில்கள் பல மூடப்பட்டு குருக்கள் வேறு நாடுகளுக்கு தப்பியோடிய அல்லது, மரண மேடைக்குச் சென்றகாலம்.

அஞ்சா நெஞ்சுடன் அறப்பணி புரிய புறப்பட்டார் ''பியன்வெனு.'' தனதுகுருத்துவ அர்ப்பணத்தின் 2 ஆம் வருடத்திலே தனது 26ஆவது வயதிலே பல அக ஒளிக் காட்சிகளோடு இறைவழி நடத்தலைக் கண்டு திருக்குடும்பம் என்ற பெயரிட்டு மூன்று இளம் பெண்களுடன் தொடங்கினார் இச் சபையை.

அவரதும் அவரது உடன் உழைப்பாளிகளான 3 அர்ப்பணித்த கன்னியர்களினதும் அயரா உழைப்பும், தெய்வீக வாழ்வும் பலரைப் பணி வரிசைக்கு ஈர்த்தது. ஆனால் பலவகை வதந்திகளும், விமர்சனங்களும் ஊரில் பரவத் தொடங்கின. பேராயர் சந்தேகிக்கலானார். பியன்வெனு நோஜுக்கு தைரிய மூட்டிய குரு நண்பர்கள் கூட புறமுதுகு காட்டினர். இம் முயற்சி முளையிலேயே கருகிவிடும் என்று பலர் நிமித்திகம் கூறினர். ஏளனமும் செய்தனர்.

ஆனால் மனித சக்தியையும், ஆற்றலையும், ஆதரவையும் துச்சமென எண்ணிய அவ்விளம் குருவையும் துளிர்த்த சபையினரையும் தன் ஜீவ சக்தியால் உறுதியூட்ட விரும்பினார் இறைவன். அதுதான் நாம் இன்று மகிழ்வுடனும், நன்றிப் பெருக்குடனும் கொண்டாடி நினைவுகூரும் அற்புதக் காட்சி விழா.

1822 ஆம் ஆண்டு மாசி மாதம் 3 ஆம் திகதி நற்கருணை ஆசீர்வாதத்தின் போது அங்கு கூடியிருந்தவர்களுக்கு தனது 30 வயது வாலிப தோற்றத்தையும், நம்மையெல்லாம் ஆசீர்வதிக்கின்றோம் என்ற தோரணையில் தனது வலதுகர அசைவையும் நற்கருணையிலே தோன்றி காட்டி நின்றார்.

''நீரே என் அன்பார்ந்த மகன்; இவரில் நாம் பூரிப்படைகின்றோம்'' என்று யேசுவிற்கு விதந்துரைத்த பிதாவின் வார்த்தை இலருக்கும், இவர் வழி தோன்றல்களுக்கும் உரித்தாகும்

(7ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டுக்கு உகந்த 'சலிக்கோணியா'; உவர் நிலத்தில் விளைவிக்கக்கூடிய பயிர்

## பரீட்சார்த்தச் செய்கை மேற்கொண்டு பார்க்கலாம்

புதிய பயிரினங்கள், புதிய பயிர்ச் செய்கை முறைகள் என்று புதிது புதிதாக எத்தனையோ அறிமுக மானதும் இருபதாம் நூற்றாண்டில் உலகளாவிய ரீதியில் பசி, பஞ்சம், பட்டினிச்சாவு ஆகியவற்றைத் தடுக்க முடியவில்லை.

இலங்கை ஒரு விவசாயநாடு எனக் கூறப்படுகிறது. ஆனால் இங்கும் பசி, பஞ்சம் நீங்கவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் விவசாயம் பிரதான தொழில். ஆனால் உணவுப்பொருள்களுக்குத் தட்டுப்பாடும், அதிக விலை கொடுக்க வேண்டிய நிலையும் உண்டு.

இருபத்தோராம் நூற்றாண்டின் உணவுத் தேவையைச் சமாளிப்பதற்கு இங்கும் புதிய பயிரினங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

அந்த வகையில் குடாநாட்டில் 'சலிக் கோணியா' தாவரத்தை அறிமுகப்படுத்துவது உகந்ததாகும்.

கடல் நீர்ப்பாசனத்தில் உற்பத்தியாகும் உணவுப்பயிர் 'சலிக் கோணியா' இது ஒருவரப்பிரசாதமாகும்.

இப்பயிர் நாகதாளி வகையைச் சேர்ந்தது. ஆனால் நாகதாளி போலல்லாது குறுகியகால வளர்ச்சியும், தானியப் பயிர்கள் போன்ற மெல்லிய தண்டும் உடையது. இலைகள் கிடையாது; முட்களுண்டு. இம் முட்கள் ஆறு மாத காலத்தில் விளைவெய்தி சிறிய பரிமாணமுள்ள தானியத்தைத் தரும்.

இத் தானியத்தைப் பல வகையில் பாகம் பண்ணி உண்ணலாம். இத்தானியத்தில் முப்பது வீதம் எண்ணெய்ச் சத்துண்டு. எண்ணெய் உண்ண உகந்தது. வேறு பல பிரயோசனங்களுமுண்டு. மருந்து வகைகளும் அழகு சாதனப் பொருள்களும். அவற்றில் சில மற்றும் டீசல் எண்ணெயுடன் கலந்து பாவித்ததில் வெற்றி காணப்பட்டது. இதனுடைய வைக்கோல் புரதச் சத்து மிகுந்த மிருக உணவாகின்றது.

இப்பயிர் வெப்பகாலத்தில் உன்னத வளர்ச்சி பெற்று நற்பலனைத் தரும். தண்ணீர் இதற்கு விரோதி. கரியமல வாயுவை நன்றாக உட்கொள்ளும் ஆற்றலுடையது. இதனால் சூழல் சிறப்படையும். இப்பயிர் உற்பத்தியாகு மிடங்களைப் பறவைகள் பரந்தளவில் நாடிச்செல்கின்றன.

தென் அமெரிக்காவிலுள்ள மெக்சிக்கோவில் ''சலிக் கோணியா'' வெற்றிகரமாக உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்தியாவில் வேண்டிய பரீட்சார்த்த ஆய்வின் பின் மகாராஷ்டிர மாநிலத்தில் கடலையண்டிய குச மாவட்டத்தில் லூனி என்னும் கிராமத்தில் ஆயிரம் ஏக்கர் நிலத்தில் வெற்றிகரமாக செய்கைபண்ணப்பட்ட பின் விரிவாக்க வேலைகள் நடைபெறுகின்றன சவுதி அரேபியாவில் தற்போது பரீட்சார்த்தமாகச் செய்கை பண்ணப்படுகிறது

எமது குடாநாடு கடலினால் சூழப்பட்டிருப்பதனால், இப்பயிரை பரீட்சார்த்தமாக செய்கை பண்ணுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் அக்கறை கொண்டால் பலருக்கு உணவு கிடைக்கும். கடற்கரையோர உவர் நிலங்களில் நிறைந்தமையாக இதில் ''சலிக்கோணியா''வைப் பயிரிட வாய்ப்பு உண்டாகலாம்.

நா. குகராசா
(பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்க முன்னாள் தலைவர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இறைச்சிக் கோழி (Broiler) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு; 154, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். குறிப்பு: காலை 8.30 மணி வரை சுத்தம் செய்து கொடுக்கப்படும். (9220)

இறைச்சிக் கோழி (Brojler) விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (45031)

இறைச்சிக் கோழி (Broiler) விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 15, மெமோரியல் வீதி, மானிப்பாய். (மெமோரியல் ஆங்கில 'பாடசாலை முன்பாக) (45029)

நல்லின பொமினேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 55, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (45037(

இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. திருமகள் ஸ்ரோர்ஸ், சிவலிங்கப்புளியடி, 702, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (45034)

இறைச்சிக் கோழி (புறோயிலர்) விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும். தொடர்பு: Lucky Broiler Sales Centre, Thirunelvely. (9229)

நல்ல நிலையிலுள்ள CD — 125 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. கு. யோகேந்திரன், சங்கானை — பொன்னாலை வீதி. (மானிப்பாய் பரிஸ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்பாக) மானிப்பாய். (45044)

குளிர்சாதனப்பெட்டி, மின்விசிறி, மோட்டார், மற்றும் வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. 20-02-97 ஆந் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும். முகவரி:- லயன் சி. பரஞ்சோதி அல்லது ப. ஜெயமுரளி, கற்கோவளம், பருத்தித்துறை. (45041)

## மணமகள் தேவை

32 வயது செவ்வாய் குற்றமுள்ள ஸ்தாபன உரிமையாளருக்கும், 38 வயது ஸ்தாபன பங்காளருக்கும் படித்த மணமகள் தேவை. ஞாயிறு மட்டும் 9.30— 12.30. அம்பாள் திருமண சேவை. ஸ்ரீலங்கா அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம். (45038)

## தவறிவிட்டது

செலலத்துரை சக்கரவர்த்தி ஆகிய எனது 362591622 V இலக்க அடையாள அட்டை களவாவோடை அம்மன் தேரிலன்று ஆலயத்திற்கு அருகில், சிறு தொகைப் பணம் அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அம்பாளின் ஆலயத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். (45030)

கார்த்திகேசு யோகம்பாள் ஆகிய எனது 447000415 V இலக்க தேசிய அடையாள அட்டை கறுப்பு நிற பேர்சுடன் யாழ் நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அர்ச்சுனன் வீதி, வட்டுக்கோட்டை எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (45028)

## இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி புறோயிலர் விற்பனைக்கு உண்டு. R S K. பாம் முருகபதி, உடுவில், சுன்னாகம் (உடுவில் மானஸ் பாடசாலை வீதி,) அல்லது R. S. K பாம் தபாற் கந்தோர் வீதி, மானிப்பாய் (சண்டிலிப்பாய் வீதி, மானிப்பாய்.) (45050)

## வகுப்புகள்

ஆண்டு 6—11 கணிதம், ஆங்கிலம், ஆங்கில Literature (ஆண்டு 9, 10) விஞ்ஞானம் கிழமைக்கு 5 மணித்தியால வீதம் கற்பிக்கப்படும். London Inter ஆசிரியர், 85, சிவன் கோவிலடி சிவன் கோயில் மேற்கு வீதி திருநெல்வேலி. (44992)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## புதிய மாணவர்களுக்கான அனுமதி - 1996/97

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில், 1996/97ஆம் கல்வியாண்டுக்கு புதிதாக அனுமதி பெற்றுள்ள சகல பீட மாணவர்களின் பெயர்ப் பட்டியல்கள் கிடைக்கப் பெற்று, பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளன. அத்துடன் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அனுமதி கிடைக்கப்பெற்ற மாணவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் உரியவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அனுமதி கிடைத்தோர் பின்வரும் ஆவணங்களுடனும் பதிவுக் கட்டணத்துடனும் யாழ். பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(1) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிலிருந்து கிடைக்கப்பெற்ற அனுமதிக் கடிதம்

(2) பிறப்புச் சான்றிதழ் (மூலப்பிரதி + போட்டோப்பிரதி)

(3) பாடசாலை விடுகைப் பத்திரம் (மூலப்பிரதி + போட்டோப்பிரதி)

(4) க. பொ. த (உயர்தரம்) பரீட்சைப் பெறுபேறு

(5) தேசிய அடையாள அட்டை

(6) கட்டணம்:-

- (அ) பதிவுக்கட்டணம் ரூ. 100/- (மருத்துவத்துக்கு ரூ 150/–)
- (ஆ) வைத்தியக் கட்டணம் ரூ. 50/-
- (இ) ஆய்வுகூடக் கட்டணம் ரூ. 100/-
- (ஈ) மாணவர்களுக்கான கைநூல் ரூ. 25/- ரூ. 30/-
- (உ) வழிகாட்டி நூல் ரூ. 25/-

(7) புகைப்படம்-08(அளவு 2½''X2'') (கறுப்பு+ வெள்ளை)

**பதிவுசெய்யும் நாள்கள்**

கலை – 10-02-1997, 11-02-1997

முகாமைத்துவம், வர்த்தகம் - 12-02-1997

பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் - 13-02-1997

மருத்துவம், விவசாயம் – 14-02-1997

**பதிவாளர்.**

(சி/45)

## ஆண்டு 5 புலமைப்பரிசில்

வி. என். எஸ். உதயச்சந்திரனின் 5 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் (புத்தகம்) புதிய அம்சங்களுடன் மீளாய்வு செய்யப்பட்ட புதிய பதிப்பாக வெளிவந்து விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-33)

## காணி விற்பனைக்கு

3¼ பரப்பு காணி நல்ல தண்ணீர் கிணற்றுடன் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும், மீனாட்சி அம்மன் கோவிலுக்கும் அருகாமையில். விவரங்களுக்கு: செ. தங்கராசா பொற்தொழிலாளர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (45040)

## ஜாதக குறிப்பு

வெளிநாட்டில் பிறந்த குழந்தைகளுக்கும், உள்நாட்டில் பிறந்த குழந்தைகளுக்கும் வாக்கிய திருக்கணித முறைப்படி நியாயமான கட்டணத்துடன் மூன்று தினங்களில் குறிப் பெழுத, ஜோஸ்யர் சோதிட சேவை, 308 A, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (9223)

## சலவைப் பவுடர்

துரித சலவைக்கும் வெண்மைக்கும் நுரைவளமிக்க மில்க்வைற் நீலம், பார், மெடிக்கேற்றர் சோப், சலவைத்தூள். மேலுறைகளுக்கு அரிச்சுவடி வாய்ப்பாடு, கைலேஞ்சி யோகாசன விளக்கப்படம், கலண்டர், மூலிகை மரக் கன்றுகள் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற். (சி/32)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி **செல்வி க. காவேரி** அவர்களின் தந்தையார்


**திரு. கனகராஜா**

அவர்களின் மறைவையொட்டி துயருற்று இருக்கும் குடும்பத்தவர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

**16 ஆம் அணி மாணவர்கள்,**
**மருத்துவ பீடம் - யாழ். பல்கலைக்கழகம்.**

45045)

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



| அன்னை மடியில்: | அம்மன் மடியில்: |
|---|---|
| 18 — 12 — 1957 | 26 — 01 — 1995 |

**அமரர் சுப்பிரமணியம் குமாரசாமி**
**(குட்டி)**

**திதி: 02 - 02 - 1997**

ஆண்டிரண்டு சென்றாலும் உங்கள் அன்பு முகம் என்றும் நீங்கவில்லை. அழியாத நினைவலைகள் எம் மனதை விட்டு அகலவில்லை. அன்போடு எம்மை அரவணைத்த எம் பாசமிகு அப்பாவே! என்றென்றும் உங்கள் அறிவுரைகள் எமக்கு வழிகாட்டும். ஈராண்டல்ல இரு யுகம் சென்றாலும் நித்தமும் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போம்.

நீங்காத நினைவுகளுடன் துயருறும் அன்பான:

**மனைவி, பிள்ளைகள்.**

கண்ணகை அம்மன் கோயிலடி,
கச்சாய் தெற்கு,
கொடிகாமம். (சி/ 38)


ஸ்ரீராம ஜெயம்

## திருமணம்

**அன்புடையீர்!**

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான தாது வருடம் தை மாதம் 27ஆம் திகதி **(09-02-1997)** ஞாயிற்றுக்கிழமை காலை 10.35 முதல் 11-20 வரையுள்ள பூர்வபக்ஷ துவிதியைத் திதியும் சதய நக்ஷத்திரமும் மேஷலக்னமும் கூடிய சுபயோக சுபமுகூர்த்தத்தில்

வட்டுக்கோட்டை
**பிரம்மஸ்ரீ**
**ஆனந்தசுப்பிரமணிய சர்மா தம்பதிகளின்**
பௌத்திரனும்
**எமது புத்திரனுமாகிய சிரஞ்சீவி**
**சுவாமிநாதன் சர்மா**
(A, C. A. A. C. M. A.)
Partner
M/S A. G.Sarma & Co.
(Chartered Accountants)
அவர்களுக்கு



புன்னாலைக்கட்டுவன்
**பிரம்மஸ்ரீ**
**து. தியாகராஜ ஐயர் தம்பதிகளின்**
பௌத்திரியும்
**எமது ஏகபுத்திரியுமாகிய**
**ஸௌபாக்யவதி**
**வசுந்தராவை**

கன்னிகாதான மாங்கல்யதாரண பாணிக்கிரஹணம் செய்ய, ஸ்ரீமங்கலாம்பிகா ஸமேத மஹாலிங்கேஸ்வர ஸ்வாமியினதும் ஸ்ரீவடிவாம்பிகா ஸமேத முன்னேஸ்வர ஸ்வாமியினதும், ஆயாக்கடவை ஸ்ரீ சித்திவிநாயகபெருமானதும் அருள்துணையுடனும், ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சார்ய ஸ்வாமிகளது அனுக்கிரஹத்துடனும், பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி சுபமுகூர்த்தம் மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீபால செல்வவிநாயகர் கோவில் மண்டபத்தில் நடக்கவிருப்பதால் தாங்கள் இஷ்டமித்திர குடும்ப சமேதராக வந்திருந்து சுபமுகூர்த்தத்தை நடத்தி வைத்து ஆசீர்வதிக்கும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

**சமாவர்த்தனம்: 9-2-97 காலை 7-00 மணி முதல் 8-30 வரை அதே ஆலயத்தில் நடைபெறும்.**

**சுபமங்களம்**

கலாபூஷணம் ஸ்ரீ. A. கணேச சர்மா-
ஸ்ரீ வடிவாம்பிகை தம்பதிகள்
4/3 ஹல்ஹஸ்வத்தை வீதி,
கிருலப்பனை, கொழும்பு - 06.

ஸ்ரீ. ஸ்ரீமதி. தி. ஞானசேகர ஐயர் -
ஞானலக்ஷ்மி தம்பதிகள்
19/7, பேராதனை வீதி,
கண்டி.

அவ்வண்ணமே கோரும்
ஸ்ரீமதி. சாவித்திரி நாகராஜ சர்மா
ஆயுர் டாக்டர் A. நாகராஜ சர்மா L. A. M. P. (Cey.) R.I.M. P. DI H (India)
வட்டுக்கோட்டை.

★ தங்கள் நல்வரவை நாடும் ★

ஸ்ரீ. G. A. சர்மா தம்பதிகள் (அபுதாபி)
ஸ்ரீ. [illegible] தம்பதிகள் (கனடா)
ஸ்ரீ. [illegible] (அபுதாபி)

ஸ்ரீ. T. கெங்காதரக்குருக்கள் தம்பதிகள் (புன்னாலைக்கட்டுவன்)
ஸ்ரீ. T. சாமிநாத ஐயர் தம்பதிகள்
ஸ்ரீ. N. வைத்தீஸ்வரன் தம்பதிகள்

(இருவீட்டார் அழைப்பு) (44990)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# உதயன்

## வேரறுக்கும் மது

காரிருள் கவ்வி நின்ற பயங்கர இரவு அது. ஆளை ஆள் தெரியாத இருட்டு. இப்போதைய வழமைப் பிரகாரம் அடுத்த வீட்டில் அவலக் குரல் கேட்டாலும் எட்டியும் பார்க்க முடியாத சங்கடமான கட்டுப்பாடு.

அது ஒரு கிராமப்பகுதி. அனேகமாக எல்லா வீட்டு வெளிப் படலைகளும் பூட்டப்பட்டிருந்தன. வீடுகளின் கதவுகளுக்கும் தாழ்ப்பாள்கள் போடப்பட்டுவிட்டன. வெளியிலே பூனையோ நாயோ ஓடிச் ''சருகுச் சத்தம்'' கேட்டாலும், பயங்கரமாகக் காதுகளில் ஒலிக்கும். வேண்டாத பயங்கரக் ''கற்பனைகள்'' எல்லாம் மனதைச் சுற்றி வட்டமிடும்.

இத்தகைய ஓர் அடங்கிய சூழலில், திடீரெனப் பெரும் சத்தம் கேட்டது. அயலில் உள்ளவர்கள் அச்சத்தின் அகழிக்குள் வீழ்ந்தவர்களானார்கள். என்னவோ, ஏதோ என்று வெலவெலத்துப் போனார்கள். படார், படார் என்ற அந்தப் பெரும் சத்தம் தொடர்ந்து கேட்டது.

கூரை உடைக்கும் சத்தமாக அது சிலர் காதில் தொனித்தது. வீட்டில் களவெடுக்கும் திருடர் அட்டகாசமோ என்று அவர்கள் நினைத்தார்கள். வெளியேயும் பார்க்க முடியாது உள்ளேயும் பார்க்க முடியாது என்ற இரவு ஊரடங்கில், அச்சத்தின் மிகுதியால் உறங்கி விட்டார்கள்.

காலை எழுந்த பின்னர் தான் உண்மை தெரிந்தது. உடைக்கப்பட்டது வீட்டின் அஸ்பெஸ்டஸ் கூரை. உடைத்தவர் வீட்டுச் சொந்தக்காரரே ஆவார்!

மனைவியுடன் நடந்த சண்டையைத் தொடர்ந்து அந்தச் சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படுகிறது. நிச்சயமாக மதுவின் மயக்கத்தினாலன்றி வேறு நிலையில் இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்க முடியாது என்பது அயலவர்கள்பலரின் கருத்து.

சகல மது பானவகைகளும் உள்ளூர் கசிப்பும் இப்போது குடா நாட்டின் பல குடும்பங்களை இவ்வாறு சீரழித்து வருகின்றன. அவை தங்கு தடையின்றிக் கிடைக்கின்றன. தடுப்பதற்கான தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டியது எவரின் பொறுப்பு என்பது இன்னமும் தெரியாத நிலை.

சாதாரண காலங்களிலேயே மது அரக்கன் சமூகத்தை வேரறுத்து வந்தான். இன்று அதுமேலும் மோசமடைந்திருக்கிறது. மதுவுக்கு அடிமையாகாதவர் குறைவு என்று சொல்லும் அளவுக்கு நிலைமை படுமோசம்.

மதுபானம் தாராளமாகக் கிடைக்கிறது. அதனை விடக் குறைந்த விலையில் கசிப்புக் கிடைக்கின்றது. எனவே மதுவுக்கு அடிமையானவர்களைத் திருத்துவது கஷ்டம். ஆனால் புதிய அடிமைகள் உருவாகாமல் தடுக்கப்பட வேண்டும். இல்லையேல் வருங்காலச் சமூகம் 'குடிமக்கள்' சமுதாயமாகிவிடும். இன்றைய மாணவர்களில் பலர் மதுபானத்தை நாடுவது ஆபத்தான அறிகுறி.

கசிப்பு உற்பத்தியாளர்கள் மட்டுமன்றி அரசாங்கமும் மதுப்பாவனையை ஊக்குவித்து வருகிறது. மது வரி மூலம் கிடைக்கும் பணத்தை பெருக்கவே விரும்புகிறது.

எனவே, அரசை எதிர்பார்க்காமல், சமூக நல மன்றங்கள், நிறுவனங்கள், சமயக் கழகங்கள் மதுப்பாவனைக்கு எதிரான பிரசாரத்தில் ஈடுபட வேடிய காலம் வந்துவிட்டது. வெறும் பேச்சன்றி செயல் வேண்டும். சிந்திப்பார்களா?

# ஒரேசமயம் 500 பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய கப்பல்

## திருமலை செயலகம் கோரிக்கை

திருகோணமலை, பெப். 2

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் ஒரே நேரத்தில் 500 பயணிகளை அழைத்துச் செல்லக்கூடிய பெரிய கப்பல் ஒன்றை தந்துதவுமாறு திருகோணமலை செயலகம்புனர்வாழ்வு அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறைக்கு பயணிகளை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டு வந்த மூன்று கப்பல்களில் இரண்டு கப்பல்களும் பழுதடைந்துள்ளதால், ஒரு கப்பல் மூலம் மட்டுமே தற்போது பயணிகள் ஏற்றி இறக்கப்படுகின்றனர்.

ஒரு கப்பலில் ஆகக் கூடியது 120 பயணிகள் மட்டுமே செல்ல முடியும்.

வவுனியாவில் இருந்து வந்த அகதிகளும், வேறு வேலைகளுக்காக வந்தவர்களுமாக சுமார் 10 ஆயிரம் பேர் வரை திருகோணமலையில் தங்கியுள்ளனர்.

அவர்களை விரைவாக யாழ்ப்பாணம் அனுப்ப வசதியாக 500 பேர் பயணம் செய்யக் கூடிய கப்பல் ஒன்றைத் தந்துதவவேண்டும் —

இப்படி திருமலை செயலக அதிகாரிகள் கோரியுள்ளனர். (இ-3-150)

## ரி. என். எல். விவகாரம்:

## பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது

கொழும்பு, பெப். 2

ரி. என். எல். தொலைக்காட்சி சேவைக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கையை வாபஸ் பெறுமாறும் —

மாற்றாக தகவல் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின் கீழ் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் — ஜனாதிபதி தம்மிடம் கூறியதாக அமைச்சர் தர்ம சிறி சேனநாயக்க தெரிவித்தார்.

எனினும், அந்த நடவடிக்கை எவ்வாறாக அமையுமென்பது குறித்து அவர் எதையும் விவரிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## பல்கலைக்கழக அனுமதி மாணவர் விவரப் பட்டியல்

1995 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடந்த ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையில் தோற்றி யாழ். பல்கலைக்கழக 96/97 கல்வியாண்டுக்கு அனுமதி பெற்றுள்ள மாணவர்களின் விவரப்பட்டியல் யாழ். பல்கலைக்கழகத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

கொழும்பு சென்றிருந்த யாழ்.பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இந்தப் பட்டியலை எடுத்து வந்துள்ளார்.

மருத்துவம், கலை, விஞ்ஞானம், முகாமைத்துவம், வர்த்தகம், விவசாயம் ஆகிய பிரிவுகளுக்கு அனுமதி பெறும் மாணவர்கள் தமது விவரங்களை பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

அனுமதி பெற்ற மாணவர்களுக்கான பதிவுகள் விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. [இ-3]

## குமுதம் மீது ஜெயலலிதா வழக்கு

சென்னை, பெப். 2

தமிழகத்திலிருந்து வெளிவரும் ''குமுதம்'' வார இதழைத் தடைசெய்யுமாறும்— அந்த இதழில் வெளியாகும் எம். ஜி. ஆர் யார்? என்ற தலைப்பில் முன்னாள் அமைச்சர் ஆர். எம். வீரப்பனால் எழுதப்பட்டு வரும் தொடர் கட்டுரை வெளியிடப்படுவதைத் தடைசெய்யக் கோரியும்—

தமிழ்நாடு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

தன்னைப் பற்றியோ, தனக்கும் எம். ஜி. ஆருக்கும் இடையில் இருந்த தொடர்புகள் பற்றியோ அல்லது தனக்கும் எம். ஜி. ஆருக்கும் இடையே இடம்பெற்ற மோதல்கள் பற்றியோ எழுதுவதற்கு வீரப்பனுக்குத் தான் ஒப்புதலை அளிக்கவில்லை என தனது மனுவில் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனு நாளை மறுதினம் நீதிபதி எஸ். ஜெகதீசனால் விசாரிக்கப்படவுள்ளது. (இ-10)

## சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், பெப். 2

நான்கு நாள் காய்ச்சல் என யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று அனுமதிக்கப்பட்ட 5 வயதுச் சிறுவன் அனுமதிக்கப்பட்ட சில நிமிடங்களில் அங்கு மரணமானார்.

பருத்தித்துறை கிராமக் கோட்டுப் பகுதியைச் சேர்ந்த செல்வக்குமார் சுதர்சன் (வயது 5) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

பருத்தித்துறையில் இருந்து நான்கு நாள்களுக்கு முன் ஊர்காவற்றுறையில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்ற வேளை அங்கு சிறுவனுக்கு காய்ச்சல் தொடங்கியதாகவும் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த வேளை திடீரென காய்ச்சல் அதிகரித்ததை அடுத்து நேற்று அதிகாலை யாழ்.ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டு அங்குஅனுமதித்த வேளையே இறந்ததாகவும் தாயாரால் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## இடம் மாற்றம்

சண்டிலிப்பாய், பெப். 2

தற்போது மல்லாகத்தில் இயங்கி வரும் கீரிமலை கமநலச் சேவை கேந்திர நிலையம் சண்டிலிப்பாய் வடக்கு தொட்டிலடிக்கு இடம்மாற்றம் செய்யப்பட உள்ளது. (இ-135)

## பிரார்த்தனை

யாழ்ப்பாணம், பெப். 2

யாழ்ப்பாண நல்லூர்திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் மாத முதல் ஞாயிறு தோறும் இடம்பெறும் பிரார்த்தனையும், திருவடி அபிஷேகமும், இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும். (அ-15)

# உங்கள் கண்ணீரை காணும் யேசு இப்போதே உங்களண்டை வருவார்

இன்று மக்கள் பலவித பாரங்களால், தொல்லைகளால், நசுங்கி, நொருங்கி, சிறப்பான வாழ்வு தமக்கு அமையாதா என்று ஏங்கிக் கொண்டே இருக்கிறார்கள். கணவனால், மனைவியால், குடும்பத்தினரால், அயலவரால் ... இப்படி அடுக்குத் தொடர் போல ஏதாவது ஒரு வகையில் பிரச்சினை தோன்றிக் கொண்டேயிருக்கிறது. பிரச்சினை இல்லாத வாழ்வே இல்லை. ஆனால் வாழ்வே பிரச்சினையானால்...? அதை விடக் கொடியது வேறேது!

இவற்றால் நம்பிக்கை இழந்து வாழும் மக்களே? இதோ உங்களை விசாரிக்கின்றவர் ஒருவர் இருக்கிறார், அவர் உங்கள் மீது அக்கறை உள்ளவர். அவர் உங்களை அசட்டை செய்யவே மாட்டார். அவர் உங்களை விசாரிப்பார். அவர்தான் உன்னதத்தில் இருக்கும் ஒப்பற்ற பரிசுத்தமுள்ள மன உருக்கமும் கிருபையும் இரக்கமும் நிறைந்த கர்த்தராகிய கிறிஸ்து. அவரைக் குறித்து பரிசுத்த வேதாகமம் விளம்பும் அன்பின் ஆலோசனை இது தான். ''அவர் உங்களை விசாரிக்கிறவர். ஆனபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்,'' [1பேதுரு 5:7]

இந்த நிகரேயில்லாத நேசரின் குரலைக் கேட்க விரும்புகிறீர்களா? சற்றுக் கவனித்துக் கேளுங்கள் ''என் பிரியமே, நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்...என் பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகிறதே'' என் உள்ளங்கையில் உன்னை வரைந்திருக்கிறேன்'' நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை; உன்னைக் கைவிடுவது-மில்லை'' நான் உன்னை விசாரிக்கிறவர்.

அதோ அம்மா அம்மா தாகமாயிருக்கிறது. தண்ணீர் இல்லையா? நாவறண்டுவிட்டது ஐயோ அம்மா... அம்மா! தண்ணீர் தண்ணீர்! வறண்ட வனாந்தரத்திலே ஒரு செடியின் கீழிருந்து வரும் அந்தச் சத்தம் என்ன? யார் அந்தப்பிள்ளை? பெற்றவள் எங்கே போய்விட்டாள்? அந்தத் துரோகி யார்?பெற்ற பிள்ளையை வனாந்தரத்தில் தவிக்கவிட்ட அந்த வஞ்சகி யார்? அந்தப் படுபாதகி எங்கே போய் மறைந்தாள்? என்ற கேள்விகளினால் உணர்வு பொங்குகிறது.

### ஞாயிறு நற்பிரசாதம்

பெற்றவள் போய்விடவில்லை. அங்கே அம்புபாயும் தூரத்திலே அவள் நிற்கின்றாள் - இல்லை சத்தமிட்டுக் கதறிக் கதறிஅழுகிறாள் — ஏன்?

இவர்கள் வாழ்ந்து வந்த வீட்டில் நின்று அனுப்பப்பட்டார்கள். பிரயாணத்திற்கென கணவன் கொடுத்ததோ அப்பமும் ஒரு துருத்தி தண்ணீருமாகும். வந்தவர்கள் வனாந்தரத்தில் அலைகின்றார்கள். எடுத்து வந்த அப்பமும் தண்ணீரும் முடிந்து விட்டன. வந்து நிற்கும் இடமோ வனாந்தரம். தாகத்தினால் தவிக்கும் தனயனின் நிலை கண்டு துடிக்கிறது தாயுள்ளம். கண்ணீர் வடிக்கின்ற அவள் கண்கள் அங்கும் இங்கும் தண்ணீரைத் தேடிப் பார்க்கின்றன. தன் மகனைக் காப்பாற்ற தாகத்துக்கு தண்ணீர் தர யாருமேயில்லையா? வனாந்தரத்தில் தண்ணீரும் இல்லை. உதவி செய்ய மனிதருமில்லை, இதுதான் உலகம்.

முடிவாக, தான் பெற்றெடுத்துப் பாலூட்டித் தாலாட்டி வளர்த்த என் செல்வ குமாரன் சாகிறதை என் கண்களால் பார்க்கமாட்டேன் என்று, எதிராக அம்பு பாயும் தூரத்திலே போய் உட்கார்ந்து சத்தமிட்டு அழுதாள் அத்தாய். யார் அவள் கதறலைக் கேட்பார்கள்?

திடீரென ஒரு சத்தம் தொனிக்கிறது. விசாரிக்கிறவர் விரைந்து வந்து ''ஆகாரே! உனக்கு என்ன சம்பவித்தது? பயப்படாதே! பிள்ளையிருக்கும் இடத்தில் தேவனாகிய நான் அவன் சத்தத்தைக் கேட்டேன்'' (ஆதி 21: 17) தனிமையில் தவித்த அத்தாயை விசாரித்து அவளைத் தேற்றினார் தேவன். உன் மகனை பெரிய ஜாதியாக்குவேன் என்ற ஆசீர்வாதமும் கொடுத்தார்.

நண்பர்களே! நீங்கள் தனிமையில் தவிக்கிறீர்களா? எல்லோராலும் கைவிடப்பட்டு புறக்கணிக்கப்படுகிறீர்களா? கண்ணீர் வடித்துக் கொண்டு இருக்கின்றீர்களா? கவலை வேண்டாம்; உங்கள் கண்ணீரைக் காணும் இயேசு காலம் கடந்து அல்ல, இப்போதே உங்களண்டை வருவார். அரவணைத்து ஆசீர்வதிப்பார்.

-- நித்திய சத்தியன்

### நாளை

**தை 21**

**திங்கட்கிழமை**

திதி: தசமி காலை 7.23 வரை.

நட்சத்திரம்: கேட்டை நள்ளிரவு 12.03 வரை.

ஸ்மார்த்த ஏகாதசி

ராகுகாலம்: 8.05- 9.35

[illegible]

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## நுளம்பினால்...

( 4ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்து தேவையற்ற நோய் வாய்ப்படுதலைத் தடுப்பதுடன், மரணங்களையும் தவிர்க்கலாம். நாமே நமது சுகாதாரத்திற்குப் பொறுப்பாக இருக்கவேண்டும் என்ற நோக்கில் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதில் பொது நிறுவனங்கள், பாடசாலைகள், நலன் விரும்பிகள் எமது ஊழியர்கள் வரும் பொழுது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டுகின்றோம்.

## திருக்குடும்பக் . .

( 5ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பதில் ஐயமில்லை.

எனவே இவ்வாசீரைப் பெற்ற 175 ஆம் ஆண்டு நிறைவை நன்றிப் பெருக்கோடு நினைவு கூரும் நாம் புனித யூபிலி ஆண்டை நோக்கிப் பயணம் செய்யும் உங்கள் அனைவரையும் நற்கருணையிலே ''உலகம் முடியும் வரை உங்களோடு இருப்பேன்'' என்று உறுதி கூறிய யேசுக்கிறிஸ்துவோடு சேர்ந்து ஒன்றித்து உரையாடி, உறவாடி உடல் உள, உலக அமைதி பெற்று வாழ பிரார்த்திக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனக்கலவரத்தைத் தூண்ட முயற்சி பொலிஸ் நிலையங்கள் உஷார் நிலை

இனக்கலவரத்தை உருவாக்கி அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த விஷமச்சக்திகள் முயல்வதாக உயர் மட்டத்துக்கு தகவல் கிடைத்துள்ளதால், சகல பொலீஸ் நிலையங்களும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இனக்கலவரத்தை ஏற்படுத்த முயலும் சக்திகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்சத் தவறும் எந்த ஒரு பொலீஸ் பொறுப்பதிகாரியையும் இடமாற்றம் செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

நோன்பு காலத்தில் கணிசமாக முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் பொலீஸ் ரோந்தை அதிகரிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான அஷ்ரப் தலைமையிலான குழு ஒன்று ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சையடுத்தே இந்த உத்தரவுகள் விடுக்கப்பட்டுள்ளன. (இ-3-150)

# இனப்பிரச்சினையைத் தீர்க்க ஐ. தே. க முயற்சிக்கவில்லை

## கணேசலிங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 2

அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுப் பொதி தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க நிச்சயமாக உதவும் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர ஐ. தே. க. ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. ஜனாதிபதி முன்வைத்துள்ள யோசனைகளுக்கும் ஐ.தே.க ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரியவில்லை.

இவ்வாறு கொழும்பு மாநகர முன்னாள் மேயர் கே. கணேசலிங்கம் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் கொழும்பு மாநகர சபையில் சுயேச்சைக் குழுவில் தலைமை வேட்பாளராகப் போட்டியிடுவதாகவும் அரசாங்க சார்புள்ள அனைத்துக் கட்சிகளின் வேட்பாளர்களும் இக்குழுவின் வேட்பாளர் பட்டியலில் இடம்பெறுவர் என்றும்—

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி, புளொட் உட்பட அனேக தமிழ்க்கட்சிகள் தமக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளதாகவும்—அவர் மேலும் தெரிவித்தார்.

### இலங்கைத் தமிழர் பிரச்சினை:

# மத்திய அரசின் நிலைப்பாட்டுக்கு ஏற்ப மாநில அரசும் செயற்படும்

## கருணாநிதி மீண்டும் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 2

''இலங்கை விவகாரத்தில் போராளிக் குழுக்களின் ஆயுதப் போராட்டம் தொடர்பாக மத்திய அரசாங்கம் கொண்டிருக்கும் நிலைப்பாட்டுக்கு மட்டுமே தமிழக மாநில அரசு ஆதரவு வழங்கும். அதேசமயம் இலங்கைத் தமிழ் அகதிகள் பிரச்சினை, இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது ஆகியவை தொடர்பாக தொடர்ந்தும் எமது கோரிக்கைகளை நாம் மத்திய அரசிடம் வலியுறுத்தி வருகிறோம்.''

இவ்வாறு தமிழக மாநில முதலமைச்சர் மு. கருணாநிதி அறிவித்துள்ளார்.

''இலங்கை ஜனாதிபதி இந்தியாவுக்கு நான்கு நாள் விஜயம் மேற்கொண்ட சமயம் இருதரப்பு விவகாரங்கள் குறித்து ஆராயப்பட்டன. ஆனால் அப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்கு வருமாறு முதலமைச்சர் கருணாநிதி அழைக்கப்படவில்லை. இலங்கையின் உள் விவகாரங்களில் இந்தியா தலையிடாது என வெளிவிவகார அமைச்சர் குஜ்ராலும் பிரகடனம் செய்துள்ளார். அதேவேளை மத்திய அரசின் நிலைப்பாட்டை தமது அரசும் கடைப்பிடிப்பதாக முதலமைச்சரும் கூறுகிறார். இத்தகைய நிலையில் மத்திய மாநில அரசுகளுக்கு இடையில் எத்தகைய உறவுகள் இருக்கின்றன?'' என அ. தி. மு. க. உறுப்பினர் எஸ். திருநாவுக்கரசு எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கமளிக்கையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# காணாமற்போனோர் குறித்து மட்டக்களப்பில் விசாரணை

கொழும்பு, பெப் 2

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் காணாமற்போனவர்கள் பற்றி விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று மட்டக்களப்பு மேல் நீதிமன்றக் கட்டடத்தில் விசாரணையை ஆரம்பித்துள்ளது. 7 ஆம் திகதி வரை விசாரணை நடைபெறும்.

ஓய்வுபெற்ற மேல் முறையீட்டு நீதிமன்றத் தலைவர் கே. பாலகிட்ணர் தலைமையில் முறைப்பாடுகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இந்த விசாரணை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆணைக்குழுவால் நடத்தப்படும் இறுதி விசாரணை என்றும் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணாமற்போனோர் பற்றிய 500 முறைப்பாடுகள் இந்த அமர்வின்போது விசாரிக்கப்படும். (இ-5)

## விசர்நாய் தடுப்பூசி

வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு பிரதேச செயலகங்களுக்குட்பட்ட இடங்களில் விசர்நாய் தடுப்பூசி போடுவதற்கு சுகாதாரப் பகுதியினர் ஏற்பாடுகள் செய்துள்ளனர். பின்வரும் இடங்களில் வைத்து குறித்த திகதிகளில் தடுப்பூசி போடப்படும்.

**5 - 2 - 97**

காலை 9 - 12 மணிவரை— உடுவில் மல்வம் றோமன் கத்தோலிக்க ஆலய வளாகம்.
பகல் 1 – 3. 30 மணிவரை - உடுவில் பிரதேச சபை செயலகம்.

**6 - 2 - 97**

காலை 9 – 12 மணி வரை —தாவடி கிராமிய சுகாதார நிலையம்.
பகல் 1- 3.30 மணிவரை – இணுவில் மத்திய மருந்தகம்.

**10 - 2 - 97**

காலை 9 முதல் 12 மணி வரை - சுன்னாகம் மத்திய மருந்தகம். பகல் 1- 3. 30 மணிவரை - மல்லாகம் பட்டின பிரதேச சபை அலுவலகம்.

**11 - 2 - 97**

காலை 9 - 12 மணிவரை —அளவெட்டி மத்திய மருந்தகம். பகல் 1 - 3. 30 மணி வரை - [illegible]
(இ-152)


வடமராட்சி
**லயன்ஸ் கழகம்**
**கண்சிகிச்சை முகாம்**

வடமராட்சி லயன்ஸ் கழகத்தால் 19 - 1 - 1997 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட கண் சிகிச்சை முகாம் தொடர்ந்தும் 7 - 2 - 1997 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 30 மணி தொடக்கம் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஆணையாளர் (யு என். எச் சி ஆர்) காரியாலயம் அமைந்திருந்த கட்டடத்தில் (பருத்தித்துறை—யாழ்ப்பாணம் வீதியில் மந்திகை வைத்தியசாலைக்கண்மையில்) நடைபெறும்.

சிகிச்சை பெற பதிவு செய்தவர்கள் மட்டும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பதிவுச் சீட்டுகளுடன் சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

புதிய பதிவுகள் மேற்கொள்ளப்பட மாட்டாது.

லயன் க. தணிகாசலம்
(தலைவர்)
(45059)


## கிருஷாந்தி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகும்.)

இத்தகவலை ஜனாதிபதியே நேற்று முன்தினம் தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்துத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள படையினர் கைது செய்யப்பட்டு கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதுடன் நீதிவான் நீதிமன்ற விசாரணைகள் நடைபெற்று வருவது தெரிந்ததே.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவியான 18 வயது கிருஷாந்தியையும் அவரது தாயார், சகோதரர், அயலவர் ஆகியோரையும் கடந்த வருடம் ஜூன் மாதம் ஏழாம் திகதி கொலை செய்ததாக ஒன்பது படையினர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினரில் சிலர் தனிப்பட்ட முறையில் இழைக்கும் இத்தகைய குற்றச் செயல்களையும் மனித வுரிமை மீறல்களையும் அரச பயங்கரவாதம் என்று நாமகரணம் சூட்டக் கூடாது என்று ஜனாதிபதி சொன்னார். (அ-5)

## வவுனியா..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தைத் தடுக்கும் நோக்கில் 8 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 100 சதுர அடி இடத்தை ஒதுக்கிக் கொடுப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்—தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## வடக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காணாமற் போனவர்கள் தொடர்பாக 30 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றில் 5, 800 முறைப்பாடுகள் வடக்கு – கிழக்கு மாகாணத்திலிருந்து கிடைத்துள்ளன. இதுவரை 19, 400 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் முடிவடைந்துள்ளன

காணாமற் போனவர்கள், கடத்தப்பட்டவர்கள் தொடர்புடைய பொலீஸ் உத்தியோகத்தர்கள், பாதுகாப்புப் படை அதிகாரிகள் தொடர்பாக படைத்தளபதிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணை அறிக்கைகள் கிடைக்கும் வரை சம்பந்தப்பட்ட பொலீஸ் அதிகாரிகள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாதுள்ளது. ஆணைக்குழு அறிக்கையில் அவர் மீதுஉரிய குற்றச்சாட்டுகள் வெளிவரும் வரை பொலீஸ் உத்தியோகத்தர்களைக்கட்டாய லீவில் அனுப்பவும் முடியாது. சேவையில் இருந்து இடை நிறுத்தம் செய்யவும் முடியாது. இது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையையும் பெற்றுள்ளேன் — என்றார். (அ- 5)

## விடுவிக்கப்பட்ட அறுவர்

சந்தேகத்தின் பேரில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு தமது வேண்டுதலுக்கு இணங்க பின்வருவோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று ஈ பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

அவர்கள் விவரம் வருமாறு -

- ★ ஜேண் கிறகோரி நவரெட்ணம் — கச்சேரியடி.
- ★ கதிர்காமதாசன் அருள்தாசன் — ஈச்சமோட்டை.
- ★ பொன்னுத்துரை நாகேந்திரராஜா — பருத்தித்துறை வீதி,
- ★ தர்மலிங்கம் ரமேஸ்பாபு — கொக்குவில் மேற்கு.
- ★ முத்துலிங்கம் கலைச்செல்வி — இராமநாதன் வீதி
- ★ சுப்பிரமணியம் ரவிச்சந்திரன் — நாயன்மார்க்கட்டு.

## கசிப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதனைக் குடித்து விட்டு அயலவருடன் சண்டை பிடிப்பதும் —

தமது தனிப்பட்ட விரோதம் காரணமாக மற்றவர்களுக்கு பொய்த் தகவலைக் கொடுத்து அப்பாவி மக்களைப் பழிவாங்குவதும்— தொடர்ந்து நடந்து வரும் செயல்களாகக் காணப்படுகின்றன.

இச் சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோரை எச்சரிப்பதோடு தொடர்ந்து இச் செயல்களில் ஈடுபடாது இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சில நாள்களுக்கு முன் வைத்திய அதிகாரி ஒருவரின் வீட்டில் பல ஆயிரம் ரூபா களவாடப்பட்டுள்ளது

இந்த யுத்த சூழலுக்குள்ளும் தமது கடமையை— சேவையை மக்களுக்கு அளித்து வரும் ஒரு வைத்தியரின் மடியிலேயே கைவைத்துள்ளார்கள் கயவர்கள்.

நாட்டின் சூழலை சாதகமாகக் கொண்டு சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோரை மீண்டும் எச்சரிப்பதோடு மற்றவர்களின் முதுகுகளில் ஏறிச்சவாரி விடாது அவர்களின் சொத்துக்களை சுரண்டாது ஒவ்வொருவரும் தாமே வியர்வை சிந்தி உழைத்து உண்பது தமது நலத்துக்கும் சமூக நலத்துக்கும் உதந்ததென்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் கசிப்பு காய்ச்சுதல், மக்களின் சொத்துக்களை சூறையாடுதல், தனிப்பட்ட விரோதம் காரணமாக பொய்யான தகவல்களை வழங்குதல், பொய்யான வதந்திகளை பரப்புதல் என்பவற்றில் ஈடுபடாது இருக்குமாறும் மீண்டும் கேட்டுக் கொள்கின்றோம்.

மக்களினால் பல முறை எமக்கு தெரிவிக்கப்பட்ட பல முறைப்பாடுகளின் தகவல்களின் அடிப்படையில் இதனை தெரிவித்துக் கொள்கின்றோம். இவற்றினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை தெரிவித்துக் கொள்ளலாம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வன்னிப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகின்றது.

உடையார்கட்டுப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை காலை இடம் பெற்ற குண்டு வீச்சில் கந்தையா இராஜகுமார் (வயது 31), கிருஷ்ணகுமார் வள்ளிமயில் (வயது 40) ஆகியோர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

சரோஜாதேவி (வயது 40) என்ற பெண் படுகாயமடைந்தார். (இ-5)

## வாவி ஓரப் பங்கருக்குள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திமிலைத்தீவில் வாவிக்கு அருகில் இருக்கும் விமானப் படையினரின் காவல் அரணில் இருந்த விமானப்படைச் சிப்பாயே பலியானவர் ஆவார்.

வாவியில் நீந்தி வந்த புலி உறுப்பினர் ரி–56ரக துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகின்றது. (இ-5)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/[illegible] இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02 - 02 - 1997 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org